பக்கங்கள்:-32

காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | சித்திரை 19 | செவ்வாய்க்கிழமை | 02.05.2024 | அதிர்வு 275

## கிரிக்கெட் மட்டையால் தாக்கி 13 வயது மாணவன் கொலை!

### சக மாணவன் கைது

நாவலப்பிட்டியில் பாடசாலை மாணவர்கள் இருவருக்கிடையில் கிரிக்கெட் மட்டை தொடர்பில் ஏற்பட்ட பிரச்சினையால், மாணவன் ஒருவர் கிரிக்கெட் மட்டையால் தாக்கப்பட்டதில் உயிரிழந்துள்ளார். 06▶



# தமிழரசுக் கட்சியின் எதிர்காலத்தை மக்கள் மன்றத்திடம் கையளிக்கிறேன்

### கிளிநொச்சி மே தின நிகழ்வில் சிறீதரன் தெரிவிப்பு

(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

“இலங்கைத் தமிழரசுக் கட்சியையும், அதன் எதிர்காலத் தலைமைத்துவத்தையும் மக்கள் மன்றத்தின் முன் கையளித்து, தமிழ்த் தேசிய மே நாளன்று புரட்சிகர அரசியல் பயணமாக எனது அரசியல் பயணத்தை ஆரம்பிக்கின்றேன்.”

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார். 06▶







## தமிழ்ப் பொது வேட்பாளர் விடயத்தில் தெற்குத் தமிழர்களைச் சேர்க்காதீர்கள்

### தமிழரசின் மே தின நிகழ்வில் மனோ வேண்டுகோள்




“தமிழ்ப் பொது வேட்பாளர் விடயத்தில் தென்னிலங்கை தமிழர்களைச் சேர்க்காதீர்கள். அது வேறு தளம். இது வேறு தளம்.”

- இவ்வாறு கிளிநொச்சியில் நேற்று தெரிவித்தார் 06▶




தமிழரசுக் கட்சியின் பழைய உறுப்பினர் ஒருவர் நேற்றுக் காலை நேரத்துடன் தொலைபேசி அழைப்பு எடுத்தார். நம்மூர்த் தொடர்புடையவர் என்பதால் உரிமையுடன் எப்போதும் பேசுவார். அவர் சிறிதரன் அணியும் அல்லர். சுமந்திரன் குழுவும் அல்லர். மாறாக, தந்தை செல்வா வழி சிஷ்யர்.

காலையில் என்னுடன் மென்மையான கோபத்தை வெளிப்படுத்தினார்.

“தம்பி! நீங்கள் இண்டைக்குக் கிளிநொச்சியில் நடைபெறும் மே தினம் பற்றி எழுதியிருக்கிறீர்கள். ‘இது தமிழரசுக் கட்சியின் மே தின நிகழ்வு அல்ல’ என்று குறிப்பிட்டிருக்கின்றீர்கள். அது தப்பு. சிறிதரன் தமிழரசுக் கட்சிப் பிரமுகர். அவர்தான் 06▶

# சஜித் ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்றால் மலையக மக்களுக்கு நில உரிமை கிடைக்கும்

## பழனி திகாம்பரம் தெரிவிப்பு



"எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்றால் மலையக மக்களுக்கு நில உரிமை பெற்றுக் கொடுப்பது உறுதி."

– இவ்வாறு தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் தெரிவித்துள்ளார்.

தலவாக்கலை நகரில் நடைபெற்ற தொழிலாளர் தேசிய சங்கத்தின் மேதின கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"எனக்கு நம்பிக்கை இருக்கின்றது எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் நான் ஆதரிக்கும் ஜனாதிபதி வேட்பாளருக்கு மலையக மக்கள் வாக்களிப்பார்கள். சஜித் பிரேமதாஸவின் தந்தையே எமக்கு பிரஜா உரிமையை பெற்றுக்கொடுத்தார். அதனை நாம் மறந்துவிட கூடாது.

அதேபோலவே சஜித் பிரேமதாஸவும் பெருந்தோட்ட மக்களை சிறுதோட்ட உரிமையாளர்களாக மாற்றுவேன் என எனக்கு உறுதியளித்துள்ளார். இன்னும் சில மாதங்களில் சிலர் உங்களிடம் சீமெந்து, அரிசி, பருப்பு போன்ற பொருள்களுடன் வந்து வாக்கு கேட்பார்கள். நீங்கள் யாரும் அவர்களுக்கு வாக்குகளை வழங்காதீர்கள். அரிசி, பருப்பு நமக்கு தேவையில்லை. நிலவுரிமையே எமக்கு வேண்டும்.

நான் அமைச்சராக இருந்தபொழுது 7 பேர்ச்சஸ் காணியை பெற்று அதில் வீடுகளை கட்டி கொடுத்தேன். அப்போது என்னை பலர் கிண்டல் செய்தார்கள். 10 பேர்ச்சஸ் அல்லது 20 பேர்ச்சஸ் காணி கேளுங்கள் என்று. ஆனால் மலையகத்தில் எத்தனையோ. அமைச்சர்கள் இருந்தார்கள் அவர்கள் யாரும் நான் மலையகத்தில் செய்த சேவைகளை யாருமே செய்யவில்லை.

2015 முதல் 2019 வரை மலையகத்தில் பல்வேறு அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுத்தவன் நான் என்பதை பெருமையாகக் கூறுவேன். எனவே எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் நான் ஆதரிக்கும் ஜனாதிபதி வேட்பாளருக்கே உங்களது வாக்களிப்பீர்கள் என நம்புகின்றேன்."– என்றார்.

# பஸ் கட்டணத்தை குறைக்க முடியாது

## பஸ் சங்கங்கள் அறிவிப்பு

டீசல் விலை குறைக்கப்பட்டாலும் பஸ் கட்டணத்தை குறைக்க இயலாது என பஸ் உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஜூலை மாதத்திலேயே பஸ் கட்டணங்களை குறைக்க முடியும் என இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் எரிபொருள்களின் விலைகள் குறைக்கப்பட்டன



# சு.கவை ஐ.தே.கவுடன் இணைக்கும் திட்டம் எதுவும் என்னிடம் இல்லை!

## சந்திரிகா அம்மையார் தெரிவிப்பு




ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைப்பதற்கு எந்த வகையிலும் முயற்சிக்கவில்லை எனவும், கட்சியைக் கட்டியெழுப்புவதற்குத் தேவையான ஒத்துழைப்புகள் வழங்கப்படும் என்றும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

"ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இன்று பூஜ்ஜிய நிலைக்கு வந்துள்ளது. கட்சி பல கூறுகளாகப் பிளவுபட்டுள்ளது. கட்சியை மீள கட்டியெழுப்புவதென்பது இலகுவான விடயமாக அமையாது. அவ்வாறான முயற்சி எடுக்கப்பட்டால் அதற்கு ஒத்துழைப்பு வழங்கத் தயார். கிராம மட்டத்திலான மக்கள் சுதந்திரக் கட்சியுடன் உள்ளனர். எனவே, புதிய நபர்களுடன் சுதந்திரக் கட்சியை கட்டியெழுப்ப முடியும் என நம்புகின்றேன்.

எனது மகன் அரசியலுக்கு வரமாட்டார். 60 வயது கடந்ததும் செயற்பாட்டு அரசியலில் இருந்து ஒதுங்குவேன் எனக் கூறினேன். அவ்வாறு செய்தேன்.

கட்சிகள் மற்றும் அமைப்புகள் விடுத்த கோரிக்கையின் பிரகாரமே 2015 ஆம் ஆண்டில் பொது வேட்பாளர் முயற்சிக்கு ஆதரவு தெரிவித்தேன். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைக்கும் திட்டம் எதுவும் என்னிடம் இல்லை." – என்றார்.




# நாணய நிதிய இணக்கப்பாடுகளை பாதுகாப்பதற்கு ஒன்றிணையுங்கள்!

## ஐ.தே.க. மே தின கூட்டத்தில் ஜனாதிபதி அழைப்பு

"சர்வதேச நாணய நிதியத்துடன் செய்து கொண்டுள்ள இணக்கப்பாடுகளை பாதுகாப்பதற்கு ஒன்றிணையுங்கள்" என்று எதிர்க்கட்சிகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீண்டும் அழைப்பு விடுத்தார்.

நேற்று ஐக்கிய தேசியக் கட்சியின் மே தின கூட்டத்தின் போதே ஜனாதிபதி இந்த அழைப்பை விடுத்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் மே தின நிகழ்வு "மீண்டும் வீழ்ச்சியடையாத கௌரவமான நாடு" எனும் தொனிப் பொருளில் நடைபெற்றது.

பல்வேறு பகுதிகளிலிருந்து வருகை தந்த கட்சி ஆதரவாளர்கள் மாளிகாவத்தை பி.டி. சிறிசேன மைதானத்தில் ஒன்று கூடினர்.

கட்சியின் பொதுச்செயலாளர் பாலித்த ரங்கே பண்டார, கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன உள்ளிட்ட பலர் இதில் கலந்து கொண்டிருந்தனர்.

பேரணியிலும் கூட்டத்திலும் கலந்துகொள்வதற்காக ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்கள் வெளிமாவட்டங்களில் இருந்து கொழும்பிற்கு வருகை தந்தனர்.

இதேவேளை, "ரணிலுக்கு இடமளிப்போம்!" எனும் தொனிப் பொருளில் கடந்த 27 ஆம் திகதி கொழும்பில் ஆரம்பமான மோட்டார் சைக்கிள் பேரணி ஐக்கிய தேசியக் கட்சியின் மே தின கூட்டம் நடைபெறும் பி.டி. சிறிசேன மைதானத்தை நேற்றுப் பிற்பகல் அடைந்தது.

ஸ்ரீலங்கா பொதுஜனவில் இருந்து நாடாளுமன்றத்திற்கு தெரிவான ஜனநாயக இடதுசாரிகள் முன்னணியை பிரதிநிதித்துவப்படுத்தும் டொக்டர் கயஷான் நவரத்னவும் கட்சி ஆதரவாளர்கள் சிலருடன் ஜனாதிபதிக்கு ஆதரவு தெரிவித்து ஐக்கிய தேசியக் கட்சியின் மே தின கூட்டத்தில் பங்கேற்றார்.

இந்த கூட்டத்தில் ஜனாதிபதி மேலும் உரையாற்றுகையில் –

"சர்வதேச நாணய நிதியத்துடனான திட்டத்தின் போது புதிதாக பணத்தை அச்சிட முடியாது என்று அறிவிக்கப்பட்டது. மேலும் அரச வங்கிகளில் கடன் வாங்கவும் முடியாதென அறிவிக்கப்பட்டது. அரசு வருமானம் ஈட்ட வேண்டும் என்றும் தெரிவித்தனர். ரூபாயைப் பலப்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

கஷ்டமாக இருந்தாலும் அதற்கான முடிவுகளை எடுத்தோம். மக்கள் விடுதலை முன்னணி, ஐக்கிய மக்கள் சக்தியும் அப்போது என்ன சொன்னார்கள்? ஆனால் இன்று நாட்டின் நிலைமை என்ன? இன்று ரூபாயின் பெறுமதி பலப்படுத்தப்பட்டுள்ளது. டொலருடன் ஒப்பிடுகையில், ரூபாவின் பெறுமதி 280 ஆக உள்ளது. ரூபாய் பெறுமதி வலுவடைந்திருப்பதால் மக்கள் கையிலிருக்கும் பணத்தின் மதிப்பு அதிகரிக்கிறது.

தற்போது, பல்வேறு நாடுகளில் இருந்து சுற்றுலா பயணிகள் நாட்டிற்கு வருகின்றனர். மேலும், கடந்த பெரும்போகத்தில் நல்ல விளைச்சல் கிடைத்தது. மேலும் தொழில்கள் மீண்டும் உயிர்பெறுகின்றன. சிறு மற்றும் நடுத்தர தொழில்களை பாதுகாக்கும் வகையில் பராட்டே சட்டத்தை ஒரு வருடத்திற்கு அமுல்படுத்தாதிருக்க நடவடிக்கை எடுத்தோம். மேற்படித் துறைகளை பாதுகாப்பதற்காக தனிப் பிரிவொன்றும் ஸ்தாபிக்கப்படவுள்ளது.

அதனால் மிகவும் சிரமப்பட்டே இன்றைய நிலைக்கு வந்துள்ளோம். சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தினால் அந்த பாதுகாப்பு கிடைத்துள்ளது. இந்த நிலைமையை பாதுகாத்து முன்னேறிச் செல்வதா அல்லது நாட்டை 2022 இல் இருந்த நிலைக்கு கொண்டுச் செல்வதா என்பதை நாம் தீர்மானிக்க வேண்டும். ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் மக்கள் விடுதலை முன்னணி உள்ளிட்ட கட்சிகளும் இத்திட்டத்திற்கு எதிராகச் செயற்படக்கூடாதெனக் கேட்டுக்கொள்கிறேன்.

வேலைத்திட்டத்திற்கு இடையூறு செய்யவும் வேண்டாம். இந்த நிலையைப் பாதுகாக்க மக்களைப் பற்றிச் சிந்தித்து அரசாங்கத்துடன் இணைந்துச் செயற்பட முன்வருமாறு கேட்டுக் கொள்கிறேன். நாம் அனைவரும் நாட்டைப் பற்றி சிந்திக்க வேண்டும். 2003 ஆம் ஆண்டு டோக்கியோ மாநாட்டிற்குச் சென்று 03 பில்லியன் டொலர்களை இலங்கைக்குக் கொண்டு வந்தேன். அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் ஒரு பில்லியன் டொலர்களை வழங்கினார்.

அதனால் 04 பில்லியன் டொலர்கள் கிடைத்தன. ஆனால் 2004 ஆம் ஆண்டில் அனைத்தும் மாறியது. அதனால் அவர்கள் திரும்பிச் சென்றனர். அந்த 04 பில்லியன் டொலர்கள் எம்மிடம் இருந்தால் இன்று அதன் பெறுமதி 10 பில்லியன் டொலர்களாக இருக்கும். 2018-2019 க்குள் வரவு செலவுத் திட்டத்தில் உபரி ஏற்பட்டது. அந்த வேலைத்திட்டத்தை முன்னெடுத்துச் சென்றிருந்தால் இந்தப் பிரச்சினை வந்திருக்காது.

தற்போது முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டத்தை மாற்றினால் நெருக்கடி ஏற்படலாம். சர்வதேச நாணய நிதியத்துடன் ஏற்படுத்தப்பட்ட நிபந்தனைகள் மற்றும் நாட்டின் துரித அபிவிருத்திக்கு தேவையான நிபந்தனைகள் அடங்கிய சட்டத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளேன். அதற்கு ஆதரவு தருமாறு அனைவரிடமும் கேட்டுக்கொள்கிறேன். ஐக்கிய மக்கள் சக்தியும், மக்கள் விடுதலை முன்னணியும் அதற்கு ஆதரவளிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மையை பாதுகாப்பதோடு, ஏற்றுமதி சார்ந்த

04









# நாணய நிதிய இணக்கப்பாடுகளை பாதுகாப்பதற்கு ஒன்றிணையுங்கள்!

## ஐ.தே.க. மே தின கூட்டத்தில் ஜனாதிபதி அழைப்பு

(3ஆம் பக்கத் தொடர்ச்சி...)

பொருளாதாரமாகவும் மாற வேண்டும். இந்த நாட்டின் பிரச்சினைகள் இன்னும் தீர்க்கப்படவில்லை. நாட்டு மக்கள் இன்னமும் கஷ்டத்தில் வாழ்கின்றனர். பல பிரச்சினைகளை எதிர்கொள்கிறார்கள். 03 வருடங்களாக இளைஞர்களுக்கு வேலை கிடைக்கவில்லை. 2019 ஈஸ்டர் தாக்குதலுக்குப் பின்னர் நாட்டின் பொருளாதாரம் ஓரளவு சரிவடைந்தது. எனவே இளைஞர்களுக்கான எதிர்காலத்தை நாம் உருவாக்க வேண்டும். பழைய பொருளாதார முறைமையினால் இதனைச் செய்ய முடியாது. இதற்கு பொருளாதாரம் திறக்கப்பட்டு புதிய முதலீடுகள் கொண்டுவரப்பட வேண்டும்.

கடந்த இரண்டு, மூன்று வருடங்களில் நிறுவனங்களின் வருமானம் குறைவடைந்திருந்தது. நாட்டின் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை வழங்குவதற்காக 04,05 பில்லியன் டொலர்களை தேடிக்கொள்ள வேண்டியிருந்தது. அவர்களின் எதிர்காலத்தை பாதுகாக்க வேண்டும். வறுமையை ஒழிக்க கிராமப் பொருளாதாரத்தை நவீனமயப்படுத்த வேண்டும். அதற்கான வேலைத்திட்டத்தை ஆரம்பித்துள்ளோம். ”– என்றார்.










பேராசிரியர் சு.வித்தியானந்தன்
நூற்றாண்டு விழா
காலம் : 11.05.2024, 12.05.2024
இடம் : யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி



# பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பிற்கான வர்த்தமானி

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 1,700 ரூபா நாளாந்த சம்பளத்தை வழங்குவதற்கான அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த அடிப்படை சம்பளம் 1,350 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்த தொகை வரவு செலவுத்திட்ட நிவாரண கொடுப்பனவை உள்ளடக்கியுள்ளதாகவும் இது ஊழியர் சேம லாப நிதியம், நம்பிக்கை நிதிய கொடுப்பனவிற்கும் ஏற்புடையது எனவும் வர்த்தமானியில் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன் தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளாந்த விசேட கொடுப்பனவாக 350 ரூபா வழங்கப்படவுள்ளது.

அதனடிப்படையில், நாளாந்த மொத்த கொடுப்பனவு 1,700 ரூபா வழங்கப்படும் எனவும் மேலதிக ஒரு கிலோவிற்கு 80 ரூபா வீதம் வழங்கப்படும் எனவும் விசேட வர்த்தமானியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பல்கலைகளில் இன்று மதியம் முதல் தொடர் வேலைநிறுத்தப் போராட்டம்



பல்கலைக்கழக ஊழியர் சங்கம்
யாழ். பல்கலைக்கழகம் - யாழ்ப்பாணம்

30-04-2024.

சகல பல்கலைக்கழகப் பணியாளர்களுக்கும்,

நாடு முழுவதிலுமுள்ள அரச பல்கலைக்கழகங்களில்

தொடர்ச்சியான வேலைநிறுத்தம்

2024 மே 02, நண்பகல் 12 மணியிலிருந்து

[illegible]

நன்றிகள்
சங்கச் சேவையில்

தலைவர்
பல்கலைக்கழக ஊழியர் சங்கம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

இணைச் செயலாளர்கள்
பல்கலைக்கழக ஊழியர் சங்கம்

நாடு முழுவதிலுமுள்ள அரச பல்கலைக்கழகங்களில் இன்று 2024 மே 02, நண்பகல் 12 மணியிலிருந்து தொடர்ச்சியான வேலைநிறுத்தப் போராட்டத்தில் பல்கலைக்கழக ஊழியர்கள் குதிக்கவிருக்கின்றனர் என அறிவிக்கப்படுகின்றது.

அனைத்துப் பல்கலைக்கழக தொழிற்சங்க கூட்டமைப்பின் 29.04.2024 திகதியிடப்பட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவருக்கு வழங்கப்பட்ட கடிதத்தின் பிரகாரம் 02.05.2024 வியாழன் நண்பகலில் இருந்து அனைத்துப் பல்கலைக் கழகங்களிலும் பல்கலைக்கழக கல்விசாராப் பணியாளர்களின் சம்பள முரண்பாடு, சம்பள அதிகரிப்பு மற்றும் அவர்களைப் பாதிக்கும் பிரச்சினைகளிற்கு உரிய கால அவகாசங்கள் வழங்கப்பட்டும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவும் அரசாங்கமும் இதுவரை தீர்வினை வழங்காமையினால் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் உடனடித் தீர்வினை வேண்டியும் தொடர்ச்சியான வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

அதனடிப்படையில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலும் இன்று 02.05.2024 வியாழன் நண்பகலில் இருந்து தொடர்ச்சியான வேலை நிறுத்தப் போராட்டத்தை பல்கலைக் கழக ஊழியர் சங்கம் மேற்கொள்ளவிருக்கின்றது என யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பல்கலைக்கழக ஊழியர் சங்க இணைச் செயலாளர் த.சிவரூபன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தங்களது உறுப்பினர்களுக்கு அவர் விடுத்த அறிவிப்பில் –

பாதுகாப்பு பணியாளர்கள் தவிர்ந்த அனைத்து அங்கத்தவர்களும் குறித்த காலப்பகுதியில் பணியிடங்களுக்குச் செல்லாது விடுவதுடன், 02.05.2024 நண்பகல் 12 மணிக்கு பணியிடங்களிலிருந்து கையொப்பமிட்டு வெளியேறி இராமநாதன் மண்டப முன்றிலில் ஒன்றுகூடுமாறு வேண்டப்படுவதோடு, 12 மணிக்கு நடைபெறும் விளக்கப்பொதுக்கூட்டத்திலும் அதனைத் தொடர்ந்து பல்கலைக்கழக முன்றிலில் முன்னெடுக்கப்படவுள்ள ஆர்ப்பாட்டத்திலும் கலந்து கொள்ளுமாறும் வேண்டுகின்றோம்.

பல்கலைக்கழகத்தில் பணிபுரியும் பயிலுநர்கள், ஒப்பந்தத் தொழிலாளர்கள், மனிதவலு நிறுவனப் பணியாளர்கள் ஆகியோரும் எமது போராட்டத்திற்கு வலுச்சேர்க்கும் முகமாக எமக்கு பூரண ஒத்துழைப்பினை வழங்குமாறு வேண்டிநிற்கின்றோம். – என்று தெரிவித்துள்ளார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
நடத்துகின்றார். அதை வேறுபடுத்தி பார்க்க விழைவது தப்பு..." என்று உரிமையுடன் கடிந்து கொண்டார்.

எனக்கு விளக்கமாகவும் தெளிவாகவும் பதில் அளிக்கப் பல விடயங்கள் இருந்தன. நியாயங்கள் இருந்தன. ஆயினும் அவர் வயது கருதியும், எனக்கு அவர் மீது இருந்த மரியாதை கருதியும், நான் வாய்வரை வந்த வார்த்தைகளை நிறுத்திக் கொண்டேன்.

"கட்சியாக முடிவெடுத்து இந்த மே தினம் நடத்தப்படவில்லை என்பதால் அப்படி எழுதி விட்டேன். சரி அப்படியே கட்சியின் மே தின நிகழ்வாக இருந்து விட்டுப் போகட்டும். அப்படியே அதை பார்ப்போம்...!" என்று கூறி நான் சமாளித்தேன்.

என்னை ஒரு கணத்தில் வாதாடி மடக்கி விட்ட திருப்தி அவருக்கு இருக்கும் என்று நினைக்கிறேன். தொலைபேசியை வைத்துவிட்டார்.

நேற்று முன்னிரவில் மீண்டும் அவர் தொலைபேசி அழைப்பு எடுத்தார். இன்னொரு தொல்லையோ என்று நினைத்துக் கொண்டு "ஹலோ!" என்றேன்.

இப்போது அவரின் குரல் மிகப் பணிவாக இருந்தது. பவ்யமாகக் குழைந்து சற்று வருத்தம் கலந்த மாதிரிப் பேசினார்.

"தம்பி... கிளிநொச்சி நிகழ்ச்சியைப் பார்த்தேன். நீ சொன்னதுதான் சரி. அது தமிழரசின் நிகழ்ச்சி அல்ல" - என்றார் அவர்.

எனக்குத் தூக்கி வாரி போட்டது.

"இல்லை, ஐயா! கட்சியின் தலைவர், சிரேஷ்ட உப தலைவர், பொருளாளர் எல்லாம் முன் வரிசையில் இருந்தவர்கள். தமிழரசை எப்படி வழிநடத்தப் போகின்றேன் என்று, விடுதலைப் போராட்டத்தை தலைவர் பிரபாகரன் தாம் எப்படி வழிகாட்டப் போகின்றார் என்று சொல்லுகிற மாதிரி சிறிதரன் அங்கு அறிவித்தார். நீங்கள் கேட்கவில்லையா? இது தமிழரசு மே தினம்தான்...!" என்றேன் நான்.

"என்ன தம்பி கிண்டலோ....?" - என்று கேட்டார் அவர். அவரே தொடர்ந்தார்.

"தம்பி தமிழரசுக் கட்சிக்கு என்றால் அதன் மூன்று நிறங்கள் இருக்க வேண்டும். அதிலும் கூட ஓர் ஒழுங்கு இருக்கின்றது. மஞ்சள்-சிவப்பு-பச்சை என்ற ஒழுங்கு இருக்க வேணும். தமிழரசின் மே தினத்தில் பச்சை நிறத்தையே காணவில்லை. சிவப்பு மாத்திரம் இருந்தால் அது மே தினம் என்று நியாயப்படுத்தலாம். ஆனால், சிவப்பு - மஞ்சள்தான் எங்கும். பச்சை நிறத்தையே திட்டமிட்டு வெட்டி விட்டார்களோ என்று தோன்றுகிறது. அதைக் காணவில்லை!..." என்று பொருமினார் அவர்.

"ஓமைய்யா...அதைமாத்திட்டம்.தந்தை செல்வா, தளபதி அமீரோட பச்சை கலந்த தமிழரசு ஆட்டம் முடிந்தது. இப்ப தலைவர் பிரபாகரனுடைய சிவப்பு, மஞ்சள் மட்டும்தான். உங்கள் நண்பர் மாவையும் அதை அங்கீகரித்துத்தானே அங்கை நிக்கிறார்..!" என்றே நான்.

அவர் வாய்க்குள் முணுமுணுப்பது போல திட்டினார். ஆனால் எனக்கு வார்த்தைகள் முழுமையாகக் கேட்டன. அவற்றை எழுதுவது பொருத்தம் அல்ல. மாவைக்கான அர்ச்சனைகள் என்று மட்டும் அவற்றைக் கூறுவேன். அத்துடன் விட்டுவிடுவோம்.

கட்சியின் யாப்பை மட்டும் அல்ல, கட்சியை நிறத்தையே மாற்றி விட்டார்கள். மஞ்சள்,சிவப்பு , பச்சை என்ற நிறமும் ஒழுங்கும் தெரியாதவர்கள்தான் இன்று கட்சியில். அவர்களுக்கு மஞ்சள் - சிவப்புக் கட்சியே பிடிக்கும். சிறிதரன் காட்டில் மழை பெய்கிறது. அவ்வளவுதான்...!

# பழைய மாணவர்கள் சங்க வருடாந்த பொதுக் கூட்டம்

மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரி கொழும்பு பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் நாளை மறுதினம் சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

மாலை 6 மணிக்குக் கொழும்பு புனித மேரி தேவாலயத்தில் பூசையும், அதனைத் தொடர்ந்து கொழும்பு Marino Beach ஹோட்டலில் (கொள்ளுப்பிட்டி) வருடாந்தப் பொதுக் கூட்டமும், இரவு விருந்து உபசாரமும் இடம்பெறும்.

இதில் கலந்துகொள்ளுமாறு பழைய மாணவர்கள் அனைவருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

## தமிழ்ப் பொது வேட்பாளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன்.

கிளிநொச்சியில் நடைபெற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தமிழ்த் தேசிய மே தின நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"சஜித் பிரேமதாஸ, என் முன்னிலையில் வடக்கு - கிழக்கு சிவில் சமூக பிரதிநிதிகளிடம் 13 ஐ முழுமையாக அமுல் செய்வேன் எனக் கூறி அதைத் தன் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இடம்பெறச் செய்வதாக உறுதியளித்தார்.

ஏனைய பிரதான சிங்கள வேட்பாளர்கள் ரணில், அநுர ஆகியோரிடம் தமிழர்களுக்கான தீர்வை தங்கள் தேர்தல் விஞ்ஞாபனங்களில் பிரசுரிக்கச் சொல்லுங்கள்.

ஜனாதிபதித் தேர்தலைப் பொது வாக்கெடுப்பாகக் கருதி வடக்கு - கிழக்கில் பொது வேட்பாளரை நிறுத்த தமிழ்க் கட்சிகளுக்கு உரிமை உண்டு. ஆனால், கடைசி நேரத்தில், ஒரு பெரும்பான்மை வேட்பாளருக்கு 2 ஆம் விருப்பு வாக்கை கொடுக்கலாம் என விக்னேஸ்வரன் எம்.பி சொல்வது, சந்தேகங்களை ஏற்படுத்தி, பொது வேட்பாளர் கோஷத்தை மலினப்படுத்துகின்றது.

ஆனால், நான் வரலாறு முழுக்க மலையகத்தில் உரிமைக்கு குரல் கொடுத்து, வடக்கு - கிழக்கில் உறவுக்கு கரம் கொடுத்துள்ளேன். அதனால் கரம் கொடுக்க இன்று கிளிநொச்சி வந்தேன்.

இன்று வடக்கு - கிழக்கில் பெரும் சவால் இளைய தமிழ் தலைமுறை நாட்டை விட்டு வெளியேறுவதாகும். இதனால் தமிழர் சனத்தொகை குறைகின்றது. கடந்த காலங்களில் மலையகத் தமிழர்கள் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களில் வந்து குடியேறினார்கள்.

அன்று அவர்கள் இங்கே வராமல் இருந்திருந்தால் இன்று தமிழர் சனத்தொகை கணிசமாகக் குறைந்து இருக்கும் என்பதை எண்ணிப் பாருங்கள். இனிமேல் மலையகத் தமிழர் இங்கே வந்து குடியேற மாட்டார்கள்.

அங்கே அவர்களுக்கான கட்டமைப்பைத் தமிழ் முற்போக்குக் கூட்டணி ஏற்படுத்தி வருகின்றது. ஆகவே, தமிழர் சனத்தொகையைக் குறையாமல் பாதுகாத்துக்கொள்ளுங்கள். இன்று தமிழரசுக் கட்சியின் நிலைமையை கண்டு கவலையடைகின்றேன்.

நீங்கள் இங்கு பலமாக இருந்தால்தான் நாம் அங்கே பலமாக இருப்போம். இதை நான் 20 வருடங்களுக்கு முன் இங்கு வந்து சொன்னேன். 10 வருடங்களுக்கு முன் இங்கு வந்து சொன்னேன். இன்றும் சொல்கின்றேன்." - என்றார்.

## தமிழரசுக் கட்சியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள 38 தொழிற்சங்கங்களின் ஒருங்கிணைப்போடும், ஆயிரக்கணக்கான பொது மக்களின் பங்கேற்போடும் கிளிநொச்சியில் நேற்று பேரெழுச்சியுடன் நடைபெற்ற தமிழ்த் தேசிய மே நாள் நிகழ்வுகளை ஒழுங்கமைத்து, அந்நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மே நாள் உரையில் அவர் மேலும் குறிப்பிட்டதாவது:-

"கட்சியின் இயக்கத்தை முடக்கி, உட்கட்சி ஜனநாயகத்தைச் சவாலுக்கு உட்படுத்தி, கட்சிக்கு எதிராகத் தொடரப்பட்ட நீதிமன்ற வழக்கு நிலுவையில் இருப்பதால் அது தொடர்பில் கருத்துரைக்க முடியாத நிலை உருவாகியிருக்கின்றது. கட்சி உறுப்பினர்களின் பெரும்பான்மை ஆதரவோடு தலைமைப் பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டதால் என்னை இன்று நீதிமன்றில் நிறுத்தியிருக்கின்றார்கள். இவற்றையெல்லாம் கடந்தும் கட்சியைத் தளம்பலற்றுக் கொண்டுசெல்வதற்காக நான் மேற்கொண்ட விட்டுக்கொடுப்புகள், எதிர்கொண்ட சமரசப் பேச்சுகள், அது சார்ந்து நான் முன்னெடுத்த முயற்சிகள் என எல்லாவற்றையும் மக்களுக்கு ஆதாரபூர்வமாக வெளிப்படுத்த விரும்புகின்றேன்.

அதே நிலைப்பாட்டின் அடிப்படையில், இந்த மாபெரும் மக்கள் மன்றத்தின் முன்னிலையில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் எதிர்காலத்தையும் கட்சித் தலைமையின் எதிர்காலத்தையும் முன்னிறுத்தி எனது புரட்சிகர அரசியல் பயணத்தை ஆரம்பிக்கின்றேன்." - என்றார்.

## கிரிக்கெட் மட்டையால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
நாவலப்பிட்டிய மொன்டிகிறிஸ்டோ கீழ்ப் பிரிவு தோட்டத்தைச் சேர்ந்த 13 வயது மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கிரிக்கெட் மட்டையால் தாக்கினார் எனக் கூறப்படும் மாணவன் நாவலப்பிட்டி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இரு மாணவர்களும் பாடசாலை நண்பர்கள் எனவும், இருவரும் கடந்த ஏப்ரல் மாதம் 23ஆம் திகதி கிரிக்கெட் விளையாடச் சென்றபோது, கிரிக்கெட் மட்டைக்காக ஏற்பட்ட முரண்பாட்டில் இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் கடும் காயங்களுக்குள்ளான மாணவன் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.




# மட்டக்களப்பில் தமிழரசின் மே தின நிகழ்வு

மட்டக்களப்பில் நேற்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மே தின நிகழ்வு உணர்வெழுச்சியுடன் நடைபெற்றது. இதில் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் உள்ளிட்ட கட்சியின் முக்கியஸ்தர்கள், உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் மற்றும் தொழிலாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.
















# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## சர்ச்சைக்குரிய உத்தரவு

உயர் நீதிமன்றத்திற்கு பிரதம நீதியரசர் பதவியைத் தவிர வேறு நீதியரசர்களை நியமனம் செய்வதற்காகப் பரிந்துரைப்பதற்கு ஜனாதிபதிக்கும் அரசமைப்பு கவுன்ஸிலுக்கும் இடைக்காலத் தடைவிதித்து, நேற்று முன்தினம் உயர்நீதிமன்றம் விடுத்துள்ள உத்தரவு பல்வேறு அரசியல் - நீதித்துறை அதிர்வலைகளைக் கிளப்பி இருக்கின்றது. பலத்த வாதப் பிரதிவாதங்களை தோற்றுவித்திருக்கின்றது.

இந்த இடைக்கால தடை உத்தரவை வழங்கிய உயர்நீதிமன்றம் சம்பந்தப்பட்ட வழக்கை ஐந்து மாதங்கள் தள்ளி, ஒக்டோபர் 4 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்திருக்கிறது.

அதற்குப் பிறகும் இந்த வழக்கு நீடிக்கும்போது இந்த இடைக்காலத் தடையும் நீடிக்குமாயினும், இப்போதைய நிலையில் - எடுத்த எடுப்பிலேயே - அது ஐந்து மாதங்களுக்கு மேல் தொடரப் போகின்றது.

வெளித்தோற்றத்துக்கு இது வெறும் தடை உத்தரவுதான். ஆனால் அதற்கு அப்பால் இதற்குள் பெரிய அரசியல் சட்டச் சிக்கலும் பொதிந்திருப்பதை உயர் நீதிமன்றம் கவனத்தில் கொண்டதா என்ற பெரும் கேள்வி எழுகின்றது.

உயர்நீதிமன்றத்திற்கு நீதியரசர்களை ஜனாதிபதி பரிந்துரைப்பதும், அதனை அரசமைப்பு கவுன்ஸில் அங்கீகரிப்பதும் அரசமைப்பு வழியில் உறுதி செய்யப்பட்ட ஒழுங்கு முறைகள்.

அந்த ஒழுங்கு முறைக்கு இடைக்கால தடைவிதித்திருக்கின்றது உயர்நீதிமன்றம். ஒருவகையில் இந்த இடைக்கால உத்தரவு அரசமைப்பின் வரைமுறையான ஏற்பாடுகளுக்கும் அவற்றின் நடைமுறையாக்கத்துக்கும் தடைவிதிக்கும் நடவடிக்கைய ஒத்தது. அதாவது, அத்தகைய அதிகாரம் - அரசமைப்பு விதிகளை இடைநிறுத்தம் செய்யும் விதத்திலான உத்தரவுகளை வழங்கும் நியாயாதிக்கம் - உயர்நீதிமன்றுக்கு எந்த சந்தர்ப்பத்திலாவது உண்டா என்று ஒரு பிரதான கேள்வி இந்த இடைக்கால உத்தரவை அடுத்து எழுந்திருப்பதாகவே தோன்றுகின்றது.

உயர்நீதிமன்ற நீதியரசர்கள் நியமனம் தொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு உள்ள அதிகாரங்களைத் தடுப்பதன் மூலம் அரசமைப்பின் சரத்துக்களின் நடைமுறையாக்கத்தை உயர் நீதிமன்றம் இடைநிறுத்துகின்றது, அதற்கான நியாயாதிக்கம் உயர்நீதிமன்றுக்குக் கிடையாது என்ற அடிப்படையில் இப்போது உயர்நீதிமன்றம் வழங்கிய இடைக்கால உத்தரவை மீள்கவனிப்புச் செய்யக் கோரும் விண்ணப்பம் ஏதும் உயர்நீதிமன்றுக்கு வந்தாலும், அதை பரிசீலித்து உயர்நீதிமன்றம் தனது தற்போதைய உத்தரவை மாற்றினாலும் கூட ஆச்சரியப்படுவதற்கு இல்லை என்றுதான் கருதுகிறோம்.

ஒக்டோபர் 17ஆம் திகதிக்கு முன்னர் ஜனாதிபதி தேர்தல் நடைபெற வேண்டும். இப்போது மேற்படி இடைக்காலத் தடை உத்தரவு ஒக்டோபர் 4ஆம் திகதி வரை விதிக்கப்பட்டாலும், அதற்கு பின்னரும் இது தொடரும். ஆகையினால் இன்றைய நிலையில், தற்போதைய ஜனாதிபதிப் பதவிக் காலத்தில் இன்னொரு உயர்நீதிமன்ற நீதியரசரை நியமிக்கும் வாய்ப்பு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்குக் கிடைக்காது என்பது பெரும்பாலும் உறுதி.

அடிப்படை உரிமை மீறல் வழக்குகள் இப்போதெல்லாம் இரண்டு, மூன்று வருடங்கள் இழுபடுவதே வழமை. இந்த வழக்கில் இப்போது இந்தத் தவணையே எடுத்த எடுப்பில் ஐந்து மாதங்களுக்கு மேல் தள்ளிப் போய்விட்டது. இன்னும் மேலும் பல மாதங்கள் அது இழுபடும் என்பதும் தெரிகிறது. மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் நிஸ்ஸங்க பந்துல கருணாரட்னவின் உயர்நீதிமன்ற நீதியரசர் நியமனம் தொடர்பிலேயே இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டு ஜூனில் 63 வயதை எட்டியதும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் பதவியிலிருந்து அவர் ஓய்வு பெற வேண்டும். அதற்கு முன்னர் உயர் நீதிமன்ற நீதியரசர் நியமனம் கிடைத்தால் அவர் 65 வயது வரை உயர்நீதிமன்ற நீதியரசராக நீடிக்க முடியும். ஆனால் அடிப்படை உரிமை மீறல் வழக்குகள் உயர் நீதிமன்றத்தில் வருடக் கணக்காக இழுபடுகின்றமையைப் பார்க்கும் போது இந்த வழக்கு விசாரணை மூலம் அவருக்கு உயர் நீதிமன்றத்தில் பணியாற்றும் பிராப்தம் கிடைக்கும் என்பது துர்லபமே.

ஏற்கனவே உயர்நீதிமன்றத்தில் இரண்டு நீதியரசர்கள் பதவிகள் நிரப்பப்படவில்லை. இன்னொரு நீதியரசர் நான்கு மாதங்களில் ஓய்வு பெறுகிறார். இந்த நிலையில் உயர்நீதிமன்ற நீதியரசர் நியமனங்கள் தடைப்பட்டால் அங்கு வழக்குகளின் தேக்கம் இன்னும் பல மடங்காகும்.

வழமையாகவே தாமதிக்கப்பட்ட நீதி மறுக்கப்பட்ட நீதிதான். இலங்கையில் நீதி மறுப்பும் நீடிக்கும் என்பதே இன்றைய அவல நிலையாகும்.

# டீக்கடைக்காரர் என்று என்னை விமர்சித்தனர்

## பிரதமர் மோடி உரை



"பழங்குடியின, பட்டியலின மற்றும் ஓ.பி.சி. மக்களுக்கு அரசியல் சாசனத்தில் இடஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. அதை யாரும் பறிக்க முடியாது. நான் உயிருடன் இருக்கும் வரை மத அடிப்படையில் இடஒதுக்கீடு வராது."

– இவ்வாறு பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

குஜராத்தின் பானஸ்கந்தாவில் நேற்று நடைபெற்ற தேர்தல் பிரச்சார பொதுக் கூட்டத்தில் பேசிய பிரதமர் மோடி,

"2014 இல் ஒரு டீக்கடைக்காரரால் நாட்டிற்கு என்ன செய்ய முடியும்? என காங்கிரஸ் தொடர்ந்து விமர்சித்து வந்தது. ஆனால், காங்கிரஸ்/க்கு தேர்தலில் சரியான பதிலடியை இந்த நாடு வழங்கியது.

ஒரு காலகட்டத்தில், நாடாளுமன்றத்தில் 400 இடங்களை வைத்திருந்த காங்கிரஸ், 40 இடங்களுக்குள் சுருங்கிப் போனது. பட்டியலின, பழங்குடியின மற்றும் ஓ.பி.சி. மக்களுக்கு அரசியல் சாசனத்தில் இடஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. அதை யாரும் பறிக்க முடியாது. மோடி உயிருடன் இருக்கும் வரை மத அடிப்படையில் இடஒதுக்கீடு இருக்காது.

இன்று, காங்கிரஸின் இளவரசருக்கும், அவரது கட்சிக்கும் நான் சவால் விட விரும்புகிறேன். அரசியலைப்போடு விளையாடமாட்டோம் அல்லது மத அடிப்படையில் இடஒதுக்கீடு வழங்கமாட்டோம் என அறிவிக்க வேண்டும். பா.ஜ.க. இருக்கும் வரை இடஒதுக்கீடு பாதுகாக்கப்படும்.

ஒட்டுமொத்த மோடி மற்றும் ஓ.பி.சி. சமூகத்தினரையும் திருடர்கள் என்று அழைத்தார் காங்கிரஸ் இளவரசர். தற்போது 2024 இல், இடஒதுக்கீடு முடிவுக்கு வரும் என்ற புதிய பொய்யை காங்கிரஸும், இண்டியா கூட்டணியும் பரப்பி வருகின்றனர்.

காங்கிரஸுக்கு எந்தவித தொலைநோக்குப் பார்வையும் கிடையாது, நாட்டு மக்களுக்கு வேலை செய்வதற்கான ஆர்வமும் இல்லை. ஆனால், நாங்கள் ஏழைகள் மற்றும் விவசாயிகளின் நலன் மேம்பாட்டிற்காக புதிய தீர்மானங்களை கொண்டு வர உள்ளோம்." – என்றார்.

# 70 கோடி பேர் வேலைவாய்ப்பின்றி இருக்கின்றனர்; பிரியங்கா தகவல்

"நாட்டில் வேலையின்மை விகிதம் உச்சம் தொட்டுள்ளது. 70 கோடி பேர் வேலையில்லாமல் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள்."

– இவ்வாறு காங்கிரஸ் பொதுச் செயலாளர் பிரியங்கா காந்தி குற்றஞ்சாட்டியுள்ளார்.

கர்நாடகாவின் ஹாசன் எம்.பி.யான பிரஜ்வல் ரேவண்ணாவின் சர்ச்சை வீடியோக்கள் சமூக வலைதளங்களில் பரவி பேசுபொருளாக மாறியது. இந்த விவகாரம் தற்போது அரசியலில் பெரும் சர்ச்சையைக் கிளப்பி உள்ளது.

அதேநேரம், குற்றம் தொடர்பாக விசாரிப்பதற்காக கர்நாடக அரசு சிறப்பு விசாரணைக் குழுவை அமைத்துள்ளது. எதிர்கட்சியினர் இந்த விவகாரத்தை பெரிய ஆயுதமாக மாற்றி உபயோகித்து வருகிறார்கள்.

இந்த நிலையில், அசாமின் துப்ரியில் தேர்தல் பேரணியில் உரையாற்றிய காங்கிரஸ் பொதுச்செயலாளர் பிரியங்கா காந்தி,

"கர்நாடகாவில்என்னநடக்கிறதுஎன்பதைநீங்கள்பார்த்திருக்கிறீர்கள், ஆனால் பா.ஜ.கவினர் பெண்கள் பாதுகாப்பு பற்றி பேசுகிறார்கள். பிரஜ்வால் ரேவண்ணா இந்தியாவை விட்டு வெளியேறுவதை பிரதமர் மோடி தடுக்கவில்லை.



பிரதமர் மோடி சாதாரண மக்களின் யதார்த்தத்திலிருந்து வெகு தொலைவில் இருக்கிறார். அதனால், மக்கள் படும் துயரம் அவருக்கு புரியவில்லை. நாட்டில் வேலையின்மை விகிதம் உச்சம் தொட்டுள்ளது. 70 கோடி பேர் வேலையில்லாமல் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள்.

30 லட்சம் பணியிடங்கள் வெற்றிடமாக உள்ளன. காங்கிரஸ் ஆட்சிக்கு வந்ததும் அதை நிரப்புவோம். பா.ஜ.க. மக்களைப் பற்றி சிந்திக்கவில்லை. உங்கள் குழந்தைகளுக்கு நல்ல எதிர்காலம் வேண்டும், ஆனால் நீங்கள் வாழ்க்கையை நடத்தவே போராடுகிறீர்கள்." – என்றார்.

# 60 இற்கும் மேற்பட்ட பாடசாலைகளுக்கு வெடிகுண்டுத் மிரட்டல் விடுக்கப்பட்டது



டெல்லி, தேசிய தலைநகர் வலயப் பகுதிகளில் அமைந்துள்ள 60 இற்கும் மேற்பட்ட பாடசாலைகளுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது.

இந்த வெடிகுண்டு மிரட்டல், மின்னஞ்சல் மூலம் நேற்று காலை வந்துள்ளதாக தீயணைப்புத் துறை இயக்குநர் அதுல் கார்க் உறுதி செய்துள்ளார்.

இதனையடுத்து, அனைத்துப் பாடசாலைகளுக்கும் நேற்று விடுமுறை வழங்கப்பட்டது. வெடிகுண்டு நிபுணர்களுடன் பொலிஸார் மற்றும் தீயணைப்புத் துறையினர் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

சோதனை நடவடிக்கைகளையடுத்து, செய்தியாளர்களை சந்தித்த டெல்லி பொலிஸ் துணை கண்காணிப்பாளர், அனைத்து பாடசாலைகளையும் சோதனை செய்துள்ளதாகவும், வெடிகுண்டு மிரட்டல் வெறும் வதந்தி என தெரிவித்துள்ளார்.

மேலும், மக்கள் இதுகுறித்து பதற்றமடைய வேண்டாம் எனவும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதனைத் தொடர்ந்து, மிரட்டல் வந்த ஒரு பாடசாலையை சோதனை செய்த டெல்லி துணைநிலை ஆளுநர், வி.கே. சக்சேனா, இது குறித்தான விரிவான விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கை தாக்கல் செய்யுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

# சீனாவில் திடீரென சரிவடைந்த நெடுஞ்சாலை; 9 பேர் உயிரிழப்பு







சீனாவில் கனமழை காரணமாக நெடுஞ்சாலை சரிவடைந்து ஏற்பட்ட விபத்தில் 19 பேர் உயிரிழந்துள்ளனர் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த சம்பவம் நேற்று அதிகாலை 2 மணியளவில் சீனாவின் குவாங்டாங் மாகாணத்தில் உள்ள மெய்ஜோவு நகரில் ஏற்பட்டதாக கூறப்படுகிறது.

சம்பவம் நிகழ்ந்த பகுதியில் அண்மைக்காலமாக அதிகரித்த மழைவீழ்ச்சி நிலவியதாகவும், இதன் காரணமாக பல சேதங்கள் ஏற்பட்டன எனவும் கூறப்படுகிறது.

இந்த நிலையில், நேற்று அதிகாலை 2 மணியளவில் சீனாவின் குவாங்டாங் மாகாணத்தில் உள்ள மெய்ஜோவு நகரில் உள்ள நெடுஞ்சாலை 18 மீட்டர் தூரம் அளவுக்கு சரிந்து விழுந்துள்ளது.

இரவு நேரத்தில் எதிர்பாராத வேளையில் இந்த சரிவு ஏற்பட்டதால், அந்த வழியாக வந்த 18 கார்கள் ஒன்றன்பின் ஒன்றாக மேல் இருந்து கீழே உருண்டு விழுந்து தீப்பிடித்துள்ளன.

இந்தச் சம்பவத்தில் 19 பேர் உயிரிழந்துள்ளனர். தகவல் அறிந்து வந்த மீட்பு படையினர் 30 பேரை மீட்டு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர் என கூறப்படுகிறது.

# நீதிமன்றத்தினை அவமதித்த குற்றச்சாட்டு; ட்ரம்புக்கு பெருந்தொகை அபராதம் விதிப்பு



நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டில் அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பிற்கு நீதிபதி 9,000 டொலர் அபராதம் விதித்து தீர்ப்பளித்துள்ளார் என செய்திகள் வெளியாகியுள்ளது.

அதன்படி, நேற்று முன்தினம் டொனால்ட் ட்ரம்ப் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டபோதே அவருக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2016 ஆம் ஆண்டு அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டபோது, தன்னுடனான தகாத உறவுகளை மூடி மறைக்க ஆபாச நடிகை ஸ்டார்மி டேனியல்சுக்கு 1 கோடி ரூபா கொடுத்த விடயம் தொடர்பாக அவருக்கு எதிராக நீதிமன்றத்தில் விசாரணை நடந்துவருகிறது.

இதன்போது இந்த வழக்கில் தொடர்புடையவர்கள் குறித்து பொதுவெளியில் பேசக்கூடாது என ட்ரம்புக்கு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்தது, ஆனால், அந்த உத்தரவினையும் மீறி அவர் வழக்கில் தொடர்புடையவர்களை பொதுவெளியில் தொடர்ந்து விமர்சித்து வந்தார்.

இதன் காரணமாக அவர் நீதிமன்றத்தை அவமதித்தார் என கூறி ட்ரம்ப் நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு அவருக்கு நீதிபதி 9,000 டொலர் அபராதம் விதித்து தீர்ப்பளித்திருந்தார்.

அதுமாத்திரமன்றி அவர் நீதிமன்ற உத்தரவை மீண்டும் மீறி செயற்பட்டால் சிறையில் அடைக்க நேரிடும் எனவும் எச்சரிக்கை விடுத்தார்.

தற்போது அமெரிக்காவில் ஜனாதிபதியாக ஜனநாயக கட்சியைச் சேர்ந்த ஜோ பைடன் பதவி வகித்து வருகின்றார். இந்த நிலையில், நடப்பு ஆண்டு இறுதியில் அமெரிக்காவில் ஜனாதிபதி தேர்தல் நடைபெற உள்ளது.

இதில் ஜனாதிபதி பைடன் மற்றும் குடியரசு கட்சியை சேர்ந்த முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புக்கு இடையே போட்டி நிலவி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## ஒட்டுமொத்த தமிழர் தேசத்து மக்களும்

# ஜனாதிபதித் தேர்தலை புறக்கணிக்க வேண்டும்

## முன்னணியின் மே தினச் செய்தியில் வலியுறுத்து



"நடைபெறவுள்ள சிறிலங்காவின் ஜனாதிபதித் தேர்தலை ஒட்டுமொத்த தமிழர் தேசத்து மக்களும் நிராகரிக்க வேண்டும் என்று அழைப்பு விடுக்கின்றோம்" – என்று கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மே தினச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறிலங்கா சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து தமிழர் தேசத்திற்கு எதிராக ஆரம்பிக்கப்பட்ட இன ஒடுக்குமுறையானது 75 ஆண்டுகாளக தொடர்ந்து கொண்டிருக்கின்றது. அந்த ஒடுக்குமுறையிலிருந்து விடுபடுவதற்காக தமிழர்கள் ஜனநாயக ரீதியாகப் போராடியபோது அப்போராட்டங்கள் வன்முறை வழியில் ஒடுக்கப்பட்ட காரணத்தால் தமிழர்கள் ஆயுதம் ஏந்திப் போராட நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். எனினும் தமிழ் மக்களது உரிமைக்கான ஆயுதப் போராட்டம் சிங்கள பௌத்த பேரினவாத ஆட்சியாளர்களால் இனவழிப்பு யுத்தம் மூலம் மௌனிக்கச் செய்யப்பட்டு 15 ஆண்டுகள் கடந்துள்ளது.

சிங்கள பௌத்த பேரினவாத ஆட்சியாளர்கள் பயங்கரவாதத் தடைச் சட்டமூலத்தின் வழியாகவும் தமிழ் மக்களைக் கைதுசெய்வதும், துன்புறுத்துவதும் தொடர்கதையாகவே உள்ள நிலையில் தற்போது நிகழ்நிலைக் காப்புச் சட்டத்தின் மூலமாகவும் ஒடுக்குமுறைகளைத் தீவிரமாக்கியுள்ளார்கள். இக் கொடூரமான சட்டங்கள் மூலம் கட்டமைக்கப்பட்ட இனவழிப்பு செயற்பாடுகளையும் மேற்கொண்டு வருவதுடன், படையினருக்கும், பொலிஸாருக்கும் மிதமிஞ்சிய அதிகாரத்தையும் வழங்கியுள்ளது. இவ்வதிகாரத்தைப் பயன்படுத்தி மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள் போன்ற பணிகளை மேற்கொள்ளும் தமிழர்கள் மீது ஒடுக்குமுறைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

சிங்கள அரசு தமிழருடைய உரிமைக்கான ஆயுதப் போராட்டத்தை பயங்கரவாதமாக சித்தரித்துடன், இங்கு பயங்கரவாத பிரச்சினை மட்டுமே உள்ளதாகக் கூறி, சர்வதேச சமூகத்தின் ஆதரவுடன் போரை முடிவுக்குக் கொண்டு வந்து 15 வருடங்கள் கழிந்துள்ள நிலையிலும், இன்றுவரை தமிழ் மக்களது இனப்பிரச்சினை தீர்க்கப்படவில்லை. ஆனாலும் இனப்பிரச்சினை என்ற ஒன்று இல்லை என்று அரசு சர்வதேச சமூகத்திற்குக் கூற முற்பட்டாலும்கூட இனப்பிரச்சினை தொடர்ந்தும் இருக்கிறது என்கின்ற நிலையை ஈழத் தமிழர்களாகிய நாம் தக்கவைத்திருப்பதற்கான ஒரேயொரு காரணம், இந்த நாட்டின் பிரதான சட்டமாகிய அரசமைப்பை 1948 ஆம் ஆண்டிலிருந்து தமிழ் மக்கள் நிராகரித்து வந்துள்ளமையேயாகும்.

ஒற்றையாட்சிக்குட்பட்ட 13ஆம் திருத்தச் சட்டம் 1987 நவம்பர் 14 இல் சிறீலங்காவின் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு இனப்பிரச்சினைக்கான தீர்வாக திணிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் அனைத்தும் அன்றைய காலகட்டதில் தமிழ்த் தரப்புக்களால் நிராகரிக்கப்பட்டது. குறிப்பாக ஒற்றையாட்சிக்குட்ட தீர்வுகள் எதனையும் ஏற்றுக்கொள்ள முடியாதென்ற ஆணித்தரமான நிலைப்பாட்டுடன் செயற்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் நேர்மையான தலைமைத்துவத்தின் காரணமாக ஒற்றையாட்சிக்குள் தமிழ் அரசியலை முடக்கும் செயற்பாடுகள் அனைத்தும் 2009 வரை தடுக்கப்பட்டிருந்தது. எனினும் கடந்த 2009 மே 18 இல் ஒரு இனப்படுகொலையூடாக ஆயுதப்போராட்டம் மௌனிக்கப்பட்ட பின்னர், மீண்டும் இந்தியா தனது ஆதிக்கத்திலுள்ள தமிழ்த் தரப்புக்களைப் பயன்படுத்தி, தமிழ் அரசியலை ஒரு துருப்புச்சீட்டாகக் கையாண்டு இலங்கை அரசோடு பேரம்பேசி இலங்கை அரசானது சீனாவின் விவகாரத்தில் இந்திய நலன்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படாத வகையில் செயற்படுமானால், இந்திய ஆதிக்கத்துக்குட்பட்ட தமிழ் தரப்புகளை பயன்படுத்தி, தமிழரின் அரசியலை ஒற்றையாட்சிக்குள்ளான 13ஆம் திருத்தத்திற்குள் முடக்குவதற்கும் இணங்கியுள்ளது.

"எல்லா மக்களும் சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடையவர்கள். இந்நெறிமுறைகளின்படி, தமது அரசியல் நிலைப்பாட்டையும், பொருண்மியம் மற்றும் சமூக கலாசார விடயங்களையும் மேற்கொள்ளும் வழிவகைகளைத் தீர்மானிக்கும் உரித்துடையவர்களாக அவர்கள் இருப்பர்" என்று வியன்னா உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அப்பிரகடனத்தில், மக்களின் சுயநிர்ணய உரிமையை மறுதலிப்பது மனித உரிமை மீறலாகவும், அவர்களது உரிமையினை முறைப்படி நிலைநாட்டுவதனை மறுதலிக்கும் செயல் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிறிலங்காவில் – தமிழர்கள் ஒரு தேசமாக, சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடைய அனைத்துத் தகைமைகளையும் கொண்டிருக்கிறார்கள்.

தமிழ் மக்கள் தமது பொருண்மிய, சமூக, கலாசார மேம்பாட்டை மேற்கொள்வதற்கான உரிமையை, தொடர்ச்சியாக ஆட்சிக்கு வந்த சிங்களப் பெரும்பான்மை அரசாங்கங்கள் மறுத்துவந்த காரணத்தாலும், தமிழ் மக்களது இருப்புக்கு ஆபத்து உருவாகி வந்ததனாலும், 1977ம் ஆண்டு, தமது சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் ஒரு தனிநாட்டினை அமைப்பதற்கு ஆதரவு வழங்கி, ஜனநாயக ரீதியில் பெருந்திரளாக வாக்களித்திருந்தார்கள்.

இந்த வகையில் தமிழ்த் தேச மக்கள் தொடர்ச்சியாக ஒற்றையாட்சியை நிராகரித்து, தமிழ்த் தேசத்தை அங்கீகரிக்கின்ற ஒரு தீர்வை 75 வருடங்களுக்கு மேலாக வலியுறுத்தி வந்திருக்கின்ற நிலையிலே, 2009 இல் இனவழிப்புக்கு உள்ளாக்கப்பட்ட பின்னரும், ஒற்றையாட்சியை நிராகரித்தும், தமிழ்த் தேசத்தின் அங்கீகாரத்தைக் கோரியுமே ஒவ்வொரு தேர்தல்களுடாகவும் தங்களது ஏகோபித்த ஆணையை வழங்கி வந்திருக்கிறார்கள்.

12

## ஒட்டுமொத்த தமிழர் தேசத்து மக்களும்

# ஜனாதிபதித் தேர்தலை புறக்கணிக்க வேண்டும்

## முன்னணியின் மே தினச் செய்தியில் வலியுறுத்து

(11ஆம் பக்கத் தொடர்ச்சி...)

தமிழ்த் தேசமும் – அதன் இறைமையும் அங்கீகிக்கப்படு கின்ற தீர்வுக்குப் பதிலாக – ஒற்றையாட்சிக்குள் இருக்கக் கூடிய எந்தவொரு வகையான தீர்வுக்கும் (13 ஆம் திருத்தச் சட்டமாகவோ அல்லது வேறு வடிவத்திலோ) இணங்குவதா னது, தமிழ் மக்களுடைய ஆணைக்குத் துரோகம் இழைப் பதாகவே அமையும்.

1987 ஆம் ஆண்டு முதல் சிறிலங்காவின் அரசமைப் பில் உட்புகுத்தப்பட்ட 13 ஆம் திருத்தச் சட்டம் கடந்த 36 ஆண்டுகளாக முழுமையாக நடைமுறையிலிருந்து வரு கின்ற நிலையிலும், தமிழ் இனப்பரம்பலை மாற்றியமைக் கும் செயற்பாடுகளும், நில ஆக்கிரமிப்புக்களும், திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களும் இன்று வரை நடைபெற்றே வருகின்றன.

தமிழ் மக்களின் விடுதலைக்கான ஆயுதப்போராட் டத்தை இனப்படுகொலையூடாக முடிவுக்குக் கொண்டுவந்து 15 ஆண்டுகள் ஆகியிருக்கும் நிலையில், இலங்கையின் தமிழர் தாயகமான வடக்கு – கிழக்கில் சிங்கள பௌத்தம யமக்கல் பெரும் வேகமெடுத்துள்ளது.

நீதிமன்ற கட்டளையை மீறி, தமிழரின் தொன்மையான வழிபாட்டிடங்கள் அழிக்கப்பட்டு அங்கு பௌத்த விகாரை கள் கட்டப்படுகின்றன. தமிழர் தாயகமெங்கிலும், குறிப்பாக சிங்களவர்கள், பௌத்தர்கள் இயல்பாக குடியிருக்காத பகுதிகளில் கூட, பௌத்த மத ஆலயங்கள் சிறிலங்கா அரச நிர்வாக மற்றும் இராணுவ இயந்திரங்களின் துணையுடன் அமைக்கப்பட்டு வருகின்றன.

அத்தோடு – இவ்வாறு சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட பௌத்த ஆலயங்களை சூழ இருக்கும் பகுதிகளில், தமிழர் தாயகத்தின் இனப்பரம்பலை திட்டமிட்டு மாற்றியமைக்கும் முனைப்போடு, சிறிலங்கா அரச ஆதரவுடன் சிங்கள குடி யேற்ற திட்டங்களும் முன்னெடுக்கப்படுகின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மயிலத்தமடு மற்றும் மாத வனை மேய்ச்சல் நிலங்களில் தமிழர்கள் காலங்காலமாக 3 இலட்சத்துக்கும் மேற்பட்ட கால்நடைகளுடன் மேய்ச்சலுக் குப் பயன்படுத்திவரும் நிலையில், நீதிமன்ற உத்தரவை மீறி, அங்கு சட்டவிரோதமான முறையில் சிறிலங்கா அரச ஆதரவோடு சோளப்பயிர்ச்செய்கை உள்ளிட்ட சிறுதானியப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுவரும் சிங்களவர்களால், தமிழர் கள் மேய்ச்சல் நிலங்களில் இருந்து துரத்தப்படுகின்றனர். உண்மையில் இந்த தமிழர்களின் பாரம்பரிய – புராதன அடையாள நிலமானது, சிங்கள பௌத்தமயமாக்கலுக் கான பகுதியாக சிறிலங்கா அரசினால் குறிவைக்கப்பட்டு, அங்கு இனப்பரம்பலை மாற்றியமைக்கும் முயற்சிகள் மேற் கொள்ளப்படுகின்றன.

“மாதுரு ஓயா வலதுகரை அபிவிருத்தி திட்டம்” எனும் பெயரில் நடைமுறைப்படுத்தப்படும் திட்டமானது – அந்தபகு தியில் பாரம்பரியமாக கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டுவரும் தமிழர்கள் இனச்சுத்திகரிப்பு செய்யப்பட்டு, சிங்களவர்களை குடியேற்றி இனப்பரம்பலை மாற்றவே சிறிலங்கா அரசினால் பயன்படுத்தப்படுகின்றது.

புராதன தமிழ் சைவ வழிப்பாட்டிடமான வவுனியா வடக்கு வெடுக்குநாறி மலை ஆதிசிவன் ஆலயத்தை அழித்து பௌத்த புராதன பிரதேசமாக மாற்றியமைத்து பிரகடனப்படுத்தும் நோக்குடன், சிறிலங்கா அரசின் தொல்பொருட்திணைக் களம் முயற்சித்து வருகின்றது.

புராதன தமிழ் சைவ வழிப்பாட்டிடமான முல்லைத்தீவு குருந்தூர்மலையில் ஆதி சிவன் ஆலயத்தை அழித்ததுடன் அங்கு சட்டவிரோதமாக பௌத்த விகாரை ஒன்று சிறிலங்கா அரசின் தொல்பொருட்திணைக்களத்தால் அமைக்கப்பட்டு திட்டமிட்டு வரலாறு மாற்றப்பட்டுள்ளது. குறித்த பௌத்த விகாரைக் கட்டுமானம் சட்டவிரோதமானதென தீர்ப்பளித்த முல்லைத்தீவு நீதவான் நீதிமன்ற நீதிபதி பேரினவாதிகளது கொலை அச்சுறுத்தல் காரணமாக பதவியைத் துறந்து நாட்டைவிட்டு வெளியேறி வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் காங்கேசன்துறையின் தையிட்டியில் தனியார் காணிகளை சட்டவிரோதமாக ஆக்கிரமித்து சிறி லங்கா ஆயுதப்படைகளது துணையுடன் மிக உயரமான பௌத்த மதத் தூபியானது கட்டி முடிக்கப்பட்டுள்ளது. குறித்த பௌத்த தூபியை சட்டவிரோதமாக அமைத்துள்ளார்கள்.

இலங்கையில் நீதிமன்ற அதிகாரமும் பௌத்த அரசியல் அதிகாரத்துக்குட்பட்டதாவே இருந்து வருகின்றது. இங்கே சிறிலங்காவின் இறைமையின் உறைவிடமாக பௌத்த பேரின வாதமே இருப்பதால் வடக்கு – கிழக்கு நீதிமன்றங்கள் பௌத்த அரசியல் அதிகாரம் தொடர்பான விவகாரங்க ளில் செயலிழந்து இருக்கின்றன.

பௌத்தம் ஒரு ஆழமான ஆன்மீகத் தரிசனம். அன்பையும் அறத்தையும் ஆசைகள் அகன்ற பற்றற்ற வாழ்வையும் தர்மத்தையும் வலியுறுத்தி நிற்கும் தார்மீகத் தத்துவம். இந்தத் தார்மீக நெறியை மேலாகக் கடைப்பிடிப்பதாகக் கூறிக்கொள்ளும் சிங்களம், இனவாத விசத்தினுள்ளே மூழ்கிக் கிடக்கின்றது.

1948 இல் நாடு பிரித்தானிய காலனித்துவத்திலிருந்து விடுபட்டுக்கொண்டதன் பின்னர், மாறிமாறி வரும் அரசாங் கங்கள் இனத்துவ அடிப்படையிலும், இனத்துவ பாகுபாட் டுடனான கொள்கைகளையே கடைப்பிடித்து வருகின்றன. இந்த அரசாங்கங்கள், தமிழ் மக்கள் விடயத்தில் எதுவித சகிப்பதன்மையுமின்றி, இலங்கைதீவில் அவர்கள் தனித் துவமான ஒரு தேசமாக வாழ்வதனை கட்டமைப்பு ரீதியாக சிதைத்து அழிப்பதனையே குறியாகக்கொண்டு செயற்பட்டு வருகின்றன.

தமிழ் மக்கள் ஆயுதம் ஏந்தவேண்டிய நிலைக்குத் தள்ளப் பட்டபோது, சிறிலங்கா அரசாங்கங்கள் தாம் கடைப்பிடித் துவந்த இனரீதியான பாகுபாடு மற்றும் தாம் மேற்கொண்டு வந்த இனவழிப்பு நடவடிக்கைகளை மூடிமறைத்து சர்வ தேச கவனத்தைத் திசை திருப்பும் நோக்கில் தமிழர்களின் போராட்டத்தை பயங்கரவாதமாகவும் தமிழ்மக்களை பயங் கரவாதத்திற்கு ஆதரவானவர்களாகவும் காட்டின.

2009 இல் தமிழ்மக்களின் ஆயுதப்போராட்டமானது இனவழிப்புடன் முள்ளிவாய்க்காலில் முடிவுறுத்தப்பட்டதன் காரணமாக, எதிர்த்து நிற்கும் ஆற்றலை தமிழ்மக்கள் இழந்து விட்டதாக சிறிலங்கா அரசாங்கம் திருப்தியடைந்துள்ளது. தமிழர்களைப் போலன்றி, சிறிலங்கா அரசாங்கத்தின் நிலைப் பாட்டை கேள்விக்கு உள்ளாக்காத இலங்கை முஸ்லீம்கள் மீதும் தற்போது இனவாதத்தைத் திருப்பியுள்ளது.

வியன்னா பிரகடனத்தின் 62வது பந்தியில், வலிந்து காணாமற்போகச் செய்தலை தடுப்பதற்கும், அவ்வாறான செயலைச் செய்பவர்கள்மீது சட்ட நடவடிக்கை எடுப்பதற் குமாக – வினைத்திறன் மிக்க – சட்டரீதியான – நிர்வாக ரீதி யான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு, அனைத்து நாடுகளுக்கும் வேண்டுகோள் விடுத்திருக்கிறது. நாடுகள், தமது ஆட்புல எல்லைக்குள் இவ்வாறான நடவடிக்கைகள் நடைபெறுவதாக நம்புவதற்கு இடமிருக்கும்போது, அவை தொடர்பில் – விசாரணைகளை மேற்கொள்ளவேண்டியது அந்நாடுகளின் கடமை என்பதனையும், இக்குற்றச்சாட்டுகள் நிருபிக்கப்பட்டால் சம்பந்தபட்டவர்கள் மீது, சட்ட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்பதனையும் அப்பிரகடனம் மீளவலியுறுத்துகின்றது.

இருந்தபோதிலும், சுயாதீனமான செயற்பாட்டை முன்னெடுக்க வேண்டிய இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவே மனித உரிமைகள் தொடர்பான பிரகட னங்களை மீறியும், பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை வழங்கும் பொறிமுறையிலிருந்து விலகி வருகின்றது.

13

## ஒட்டுமொத்த தமிழர் தேசத்து மக்களும்

# ஜனாதிபதித் தேர்தலை புறக்கணிக்க வேண்டும்

## முன்னணியின் மே தினச் செய்தியில் வலியுறுத்து

(12ஆம் பக்கத் தொடர்ச்சி...)

கடந்த 2023 பெப்பிரவரி மாதம், சிறிலங்காவின் மனித உரிமை ஆணைக்குழுவைச் சேர்ந்தவர்கள் வடக்கு மாகாணத்துக்குப் பயணம் மேற்கொண்டு, பாதிக்கப்பட்ட தரப்புகளான – வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள், தமிழ் அரசியற்கட்சியைச் சேர்ந்தவர்கள் எனப் பலரையும் சந்தித்தனர். இந்தச் சந்திப்புகளின்போது, மேற்குறித்த 62வது பந்தியில் குறிப்பிட்டுள்ள விடயங்களுக்கு மாறாக – பழையவற்றை மறந்துவிடுமாறும், பொறுப்புகூறலை வலியுறுத்த வேண்டாம் எனவும் முன்னைய குற்றச்செயல்கள் பற்றிய விடயங்களை சிறிலங்கா அரசாங்கத்தால் அமைக்கப்படவுள்ள உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு கையாளும் எனவும், தாம் சந்தித்தவர்களிடம் பரப்புரையில் ஈடுபட்டதுடன், அழுத்தங்களையும் பிரயோகித்துள்ளனர்.

பாதிக்கப்பட்டவர்களும், தமிழ்ச் செயற்பாட்டாளர்களும் இவ்வாலோசனைகளை நிராகரித்து, சர்வதேச குற்றவியல் பொறுப்புக்கூறல் பொறிமுறையை வலியுறுத்தியபோது, சிறிலங்கா மனித உரிமை ஆணைக்குழுவின் பிரதிநிதிகள் தங்களது கோபத்தை வெளிப்படுத்தியுள்ளனர்.

மேற்படி ஆணைக்குழு தனது களப்பயணத்தை முடித்துக் கொண்டு வெளியிட்ட அறிக்கையில், உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு போன்ற உள்ளகப் பொறிமுறையினை அமைப்பதற்கு, தாம் சந்தித்த பாதிக்கப்பட்ட தரப்புகள் இணங்கிக்கொண்டதாக அப்பட்டமான பொய்யுரைத்துள்ளது. மேலும் பல தவறான தகவல்கள் அவ்வறிக்கையில் காணப்பட்டிருந்தது.

தமிழர் தேசத்தில், இந்திய மீனவர்களின் ஆக்கிரமிப்புக்கள் தொடர்வதுடன் தமிழ்த் தேசத்தின் கடல்சார் பொருளாதாரம் திட்டமிட்டு சூறையாடப்பட்டு வருகின்றது. இந்த நிலையில், இந்திய மீனவர்களுக்கு வடக்கு கடலில் சட்ட ரீதியாகவும் அனுமதி அளிக்க முயற்சிக்கின்றார்கள். போதிய கடல்வளம் உள்ள தமிழ்த் தேசத்தில் மத்திய அரசிடம் அனுமதி பெற்றுத்தான் தமிழர்கள் கடலில் கால் வைக்க முடியும் என்ற நிலையே காணப்படுகின்றது.

ஸ்ரீலங்கா சுதந்திரம் அடைந்து 75 ஆண்டுகளில், தான் பெற்று கொண்ட பொதுபடுகடன்களை மீளச் செலுத்த முடியாது கடந்த 2022 ஆம் ஆண்டில் பொருளாதார ரீதியாக முறிவடைந்திருக்கின்றது.

நாட்டில் இனப்பிரச்சினை தோற்றம் பெற்றதை தொடர்ந்து பொருளாதார பாதிப்பு தீவிரமடைந்தது. தமிழ் மக்களை அழிப்பதற்காக மொத்த தேசிய வருமானமும், வெளிநாட்டு அரச முறை கடன்களும் முழுமையாக பயன்படுத்தப்பட்டன. யுத்த சூழல் தமிழர்களை மாத்திரமல்ல ஒட்டுமொத்த நாட்டின் பொருளாதாரத்தையும் அழித்தது. போருக்குப் பின்னரும் இனவாதத்தை மட்டுமே முதலீடாகக் கொண்டு அரசு நிர்வாகம் இடம்பெற்றுவருகின்ற காரணத்தினால் இன்னமும் நாடு பொருளாதார அழிவிலிருந்து மீண்டெழுவதற்கான அறிகுறிகள் தென்படவில்லை. தற்போதய ஆட்சியாளர்கள் பிராந்திய மற்றும் பூகோள ஆதிக்க சக்திகளது நலன்களைப் பேணுவதில் நிபந்தனையற்று ஒத்துழைக்கும் காரணத்தினால் அத்தகைய ஆட்சியாளர்களை அதிகாரத்தில் தக்கவைப்பதற்கான நோக்கத்திற்காக வழங்கப்படும் சர்வதேச உதவிகள் மூலம் நாடு முன்னேறுவதான போலித் தோற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. கடந்த 2022 இல் ஊழல் ஆட்சியாளர்கள் நாட்டு மக்களால் விரட்டப்பட்ட பின்னர் பதவியேற்ற அரசாங்கம் ஒன்றரை வருடங்கள் கடந்துள்ளபோதும் நாடு கடன்களைச் திருப்பிச் செலுத்தும் நிலையை இன்னமும் எட்டவில்லை.

இவ்வாறான சூழ்நிலையிலும் கூட மொத்தத் தேசிய வருமானத்தில் கல்வி மற்றும் சுகாதாரத்துக்கு மேற்கொள்ளப்படும் ஒதுக்கீடுகளை விட இரு மடங்கு தொகைகள் பாதுகாப்புக்கென ஒதுக்கீடு செய்யப்படுவதுடன், அந்நிதியில் மோசடிகளும் இடம்பெற்று வருகின்றன.

பொருளாதார பாதிப்புக்கு சர்வதேச நாணய நிதியம் என்பது குறுகிய கால ஒரு தீர்வாகவே அமைய முடியும். அது நிலைபேறான தன்மையை உருவாக்கப் போவதில்லை. இலங்கை புதிய பரிமாணத்தை நோக்கி பயணிக்க வேண்டுமாயின் நாட்டில் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும். அதனைத் தவிர்த்து சர்வதேச நாணய நிதியம் உள்ளிட்ட சர்வதேச தரப்பின் நிதி உதவியுடன் மாத்திரம் நாட்டைக் கட்டியெழுப்ப முடியுமென பேரினவாத ஆட்சியாளர்கள் இன்றும் கற்பனையில் நகர்கின்றார்கள்.

சிறிலங்காவின் இனவழிப்பு யுத்தத்தால், தமிழ்த் தேசத்தின் பொருளாதாரமானது ஐம்பது வருடங்கள் பின்தள்ளப்பட்டுள்ள சூழ்நிலையில், தமிழர் தேசத்தில் கட்டமைக்கப்பட்ட இனவழிப்பை அரசு தொடர்ந்தும் மேற்கொண்டுவரும் நிலையில், சிறிலங்காவின் செயற்பாட்டுக்கு நிபந்தனை எதுவுமின்றி நிதி வழங்குவது, தமிழர்களின் பொருளாதாரத்தை நசுக்கும் சிறிலங்கா அரசின் செயற்பாட்டுக்கு சர்வதேச நாணய நிதியமும் துணைபோவதாகவே உள்ளது.

இவ்வாறான சூழலில் சிறிலங்காவில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது.

தமிழர் தரப்புக் கோரிக்கைகளைக் கணக்கிலெடுப்பதற்கு எந்தவொரு பௌத்த சிங்கள ஆட்சியாளர்களோ அவர்கள் சார்ந்த கட்சிகளோ தயாரில்லாத நிலையிலும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் அற்ப சலுகைகளுக்காக தமிழ் மக்கள் தமக்கு வாக்களிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டுடன் பெரும்பான்மையின வேட்பாளர்கள் வடக்கு – கிழக்கு மக்களது வாக்குகளைக் குறிவைத்து பரப்புரைகளை ஆரம்பித்துள்ளார்கள். அதேவேளை பிராந்திய வல்லரசும் அதனுடன் கூட்டிணைந்து தமது பூகோள நலன்களை மையப்படுத்திச் செயற்படும் சர்வதேச வல்லரசுகளும், இலங்கையில் தமது நலன்களைப் பேணக்கூடிய ஒருவருரை கண்ணைமூடிக் கொண்டு எவ்வித நிபந்தனைகளும் இல்லாமல் தமிழ் மக்கள் தமது வாக்குகளை வழங்கி அவரை வெற்றிபெற வைக்க வேண்டும் என்பதற்கான நகர்வுகளையும் திரைமறைவில் ஆரம்பித்துள்ளார்கள்.

போரால் அழிக்கப்பட்ட தமிழர் தேசத்து மக்களது பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கான காத்திரமான நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ளாது முற்றாகப் புறக்கணித்தவாறு தமிழர் தாயகத்தில் கட்டமைப்புசார் இனவழிப்புச் செயற்பாடுகளை தீவிரப்படுத்தப்பட்டிருக்கும் நிலையில் சிறிலங்கா ஒரு சிங்கள பௌத்த ஒற்றையாட்சி முறைமைகொண்ட நாடு என்ற நிலைப்பாட்டில் ஒருமித்த நிலைப்பாட்டினைக் கொண்டுள்ளவர்களே பெரும்பான்மையினக் கட்சிகளது வேட்பாளர்களாக களமிறங்குகின்றார்கள். தமிழர்களது கோரிக்கைகளை கணக்கிலெடுக்கத் தயாரில்லாதவர்களாகவே பெரும்பான்மையின வேட்பாளர்கள் காணப்படுகின்றார்கள்.

எனவே, நடைபெறவுள்ள ஜனாதிபத்தித் தேர்தலுக்கும் தமிழ் மக்களுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை என்பதுடன், முக்கியத்துவம் மிக்க இந்த சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்தி பேரம் பேசி உரிமைகளை வென்றெடுப்பதற்கான திறவுகோலாக மாற்ற தமிழ் மக்கள் முயலவேண்டும். அந்த வகையில் நடைபெறவுள்ள ஜனாதிபதித்

14

## ஒட்டுமொத்த தமிழர் தேசத்து மக்களும்

# ஜனாதிபதித் தேர்தலை புறக்கணிக்க வேண்டும்

## முன்னணியின் மே தினச் செய்தியில் வலியுறுத்து

(13ஆம் பக்கத் தொடர்ச்சி...)

தேர்தலைத் தமிழ் மக்கள் புறக்கணிக்க வேண்டும் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கோருகின்றது. ஒட்டு மொத்த தமிழ் மக்களும் கூட்டாகத் தேர்தலைப் புறக்கணிக்கும் நிலையை ஏற்படுத்தினால் தமிழர்களது வாக்குகளைப் பெறவேண்டுமாயின் ஒற்றையாட்சி முறைமையை நீக்குவ தற்கும் சமஷ்டி அரசியல் யாப்பை உருவாக்குவதற்கு மான நிலையை நோக்கி பேரின வாத ஆட்சியாளர்களைத் தள்ளமுடியும். அது மட்டுமன்றி பிராந்திய மற்றும் பூகோள வல்லரசு சக்திகளும் விரும்பியோ விரும்பாமலோ ஒற்றை யாட்சியை ஒழித்து சமஷ்டி அரசியல் யாப்பினை உரு வாக்க வேண்டுமென சிங்கள ஆட்சியாளர்கள் மீது நிர்ப்பந்தங் களை பிரயோ கிக்க வேண்டிய நிலையை ஏற்படுத்தலாம்.

தமிழர் அரசியலை ஒற்றையாட்சிக்குள் முடக்கும் சதி நடவடிக்கைகளை முறியடித்து, சிங்கள மயமாக்கம் – பௌத்த மயமாக்கம் – இராணுவ மயமாக்கம் – அபிவிருத்தி என்ற போர்வையிலான ஆக்கிரமிப்புக்கள் அனைத்திற்கும் எதிராக, துணிவுடன் எதிர்வினையாற்றுவதுடன் தமது உரிமைகளை ஒருபோதும் கைவிடப்போவதில்லை என்ற உறுதியான செய்தியை சிறிலங்கா அரசுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் வெளிப்படுத்தியே வருகின்றார்கள்.

இந்திய அரசானது இலங்கையோடு நல்லுறவை பலப்படுத் தக்கொள்வதையோ அல்லது தனது பூகோள – அரசி யல் நலன்களைப் பேணுவதையோ அல்லது தென் ஆசிய பிராந்திய வல்லரசாக தன்னை நிலைநிறுத்திக்கொள்வ தையோ ஈழத்தமிழ் மக்கள் எதிர்க்கவில்லை. இந்தியாவை எமது நட்பு சக்தியாகவே கருதுகின்றோம். இந்தியாவின் தேசிய நலன்களைப் பேணுவதில் எமக்கு மிகுந்த விருப்பமும் அக்கறையும் ஈடுபாடும் உண்டு. ஆனால் தமிழ் மக்கள் தமது நட்பு சக்தியாக கருதும் இந்தியா, தனது பூகோள நலன்களைப் பூர்த்திசெய்வதற்காக தமிழ் மக்களைப் பலிக்கடாவாக்கி, தமிழ் மக்களின் நலன்களை முற்றாகப் புறக்கணிக்கும் செயற்பாட்டை நிறுத்த வேண்டுமென்பது டன், ஒற்றையாட்சியை ஒழித்து சமஷ்டி அரசமைப்பை உரு வாக்குவதற்கான அழுத்தங்களை அரசு மீது ஏற்படுத்த வேண்டு மென்பது தமிழ் மக்களது எதிர்பார்ப்பாகும்.

இந்தச் சூழ்நிலையில் இம் மேதினத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி – அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் ஏற்பாட்டில் வவுனியா மாவட்டம் குருமன்காடு கலைமகள் விளையாட்டு வளாகத்தில் ஒன்று கூடி சிங்கள பௌத்த மேலாதிக்க ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடிவரும் தமிழ் தேசமானது – தனது அடிப்படையான அரசியல் உரிமைகளில் எப்போதுமே உறுதியாக இருக்கும் என்ற செய்தியைச் சிங் கள தேசத்திற்கும், இலங்கைத் தீவின் மீது கரிசனை கொண் டிருக்கும் சர்வதேச சக்திகளுக்கும் 2024 மே தினத்தில் வலியு றுத்திக் கூறுகின்றோம்.

• தமிழ்மக்கள் 75 வருடங்களுக்கு மேலாக தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்ற தமிழ்த் தேச அங்கீகாரத்தையும் – அத னுடைய தனித்துவமான இறைமையையும் – சுயநிர் ணய உரிமையையும் முழுமையாக அனுபவிக்கக் கூடிய "சமஷ்டி" அடிப்படையிலான தீர்வை அடைய இந்திய அரசும் ஏனைய நட்பு நாடுகளும் இலங்கையை வலியுறுத்த வேண்டும் என்றும் கோருகின்றோம்.

• தமிழ் மக்கள் – காலம் காலமாக வழங்கிவரும் தமிழ்த் தேச அங்கீகாரத்துக்குரிய ஆணையை மீறி, ஒற்றையாட்சிக்கு உட் பட்ட 13 ஆம் திருத்தத்தையோ அல்லது ஒற்றையாட்சிக்குட் பட்ட வேறு எந்தவொரு தீர்வையோ தமிழினம் நிராகரிக்கின்றது.

• அந்த நோக்கில் தமிழர்களது நீண்டகால அரசியல் கோரிக்கைகளுக்கு செவிசாய்க்கும் நிலையை உருவாக்கு வதற்கு ஏதுவாக ஆட்சியாளர்கள் மீது அழுத்தங்களை ஏற்படுத்தும் முகமாக, நடைபெறவுள்ள சிறிலங்காவின் ஜனாதிபதித் தேர்தலை ஒட்டுமொத்த தமிழர் தேசத்து மக்களும் நிராகரிக்க வேண்டும் என்று அழைப்பு விடுக்கின்றோம்.

• தமிழ் மக்கள் மீதான இனப்படுகொலைக்கு சர்வதேச குற்றவியல் விசாரணை நடத்தப்பட வேண்டும்.

• இனவழிப்பு யுத்தத்தால் அழிக்கப்பட்ட வடக்கு கிழக்கு ஈழத் தமிழ்த் தேசத்தை, போரால் பாதிக்கப்பட்ட பிராந்தியமாக பிரகடனம் செய்து, அத்தேசத்தின் பொருளாதாரத்தை கட்டியெ ழுப்புவதற்கான விசேட நிதியேற்பாடுகள் செய்யப்படவேண் டும். அத்துடன் குறித்த செயற்திட்டத்தில் போரால் பாதிக்கப் பட்ட தமிழ் மக்கள், முன்னாள் போராளிகள், பெண்தலை மைத்துவக் குடும்பங்கள், பெற்றோரை இழந்த பிள்ளைகள் போன்றோர் உள்வாங்கப்பட்டு அவர்களின் பொருளாதாரம் கட்டியெழுப்பப்பட வேண்டும்.

• பயங்கரவாதத் தடைச் சட்டம் முற்றாக நீக்கப்பட வேண்டும்.

• அனைத்து அரசியல் கைதிகளும் விடுதலை செய்யப்பட வேண்டும்.

• தமது உரிமைகளுக்காக போராடும் தரப்புக்களை சிறைக் குள் தள்ளி – அச்சுறுத்தி, உரிமைகளை நசுக்க ரணில் அரசால் கொண்டுவரப்படவுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத் தையோ அல்லது அதனையொத்த எந்தவொரு சட்டத்தை– தயோ முற்றாக எதிர்க்கின்றோம்.

• ஊடக சுதந்திரத்தையும் கருத்துச் சுதந்திரத்தையும் நசுக்கும் நோக்கில் நிறைவேற்றப்பட்டுள்ள நிகழ்நிலை காப்புச் சட்டம் நீக்கப்படல் வேண்டும்.

• சட்டத்துக்குப் புறம்பான கொலைகள் நிறுத்தப்பட வேண்டும்.

• வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான சர்வதேச நீதி நிலைநாட்டப்பட வேண்டும்.

• தமிழ்த்தேசத்தின் விவசாயிகள், மற்றும் தொழிலாளர்களின் உரிமைகள் நிலைநாட்டப்படவேண்டும். அவர்களுக்குரித்தான நிவாரணங்கள் வழங்கப்படவேண்டும். தொழிலாளர்கள் ஒன்று பட்டு செயற்படக் கூடிய அவர்களின் உரிமைகள் பாதுகாக் கப்படவேண்டும்.

• தோட்டத் தொழிலாளர்களது உரிமைகள் வழங்கப்பட வேண்டும்.

• கடற்றொழிலாளர்கள் தமது கடற்றொழிலை தத்தமக் குரிய கடற்பரப்பில் சுதந்திரமாக மேற்கொள்வதற்கு அனுமதி யளிக்கப்பட வேண்டும். தென்னிலங்கை மீனவர்களது அத்து மீறிய மீன்பிடிச் செயற்பாடுகள் தடுக்கப்படல் வேண்டும். போரி னால் பாதிக்கப்பட்ட கடற்தொழிலாளர்களின் வாழ்வாதா ரத்துக்கான உதவிகளும் மேற்கொள்ளப்படவேண்டும். அத்து டன் கடற்தொழிலாளர்களின் பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்பட வேண்டும். வெளிநாட்டு மீனவர்கள் எமது கடலில் மீன்பிடிக்க அனுமதி வழங்கப்படக்கூடாது. எமது கடற்பரப்பினுள் அத்து மீறும் இந்திய மீனவர்களது நடவடிக்கைகள் உடனடியாக தடுத்து நிறுத்தப்படல் வேண்டும்.

• அம்பாறை மாவட்டம் கல்முனை வடக்கு தமிழ் பிர தேச செயலகத்தின் அதிகாரங்களைப் பறிப்பதற்கு மேற் கொள்ளப்படும் நடவடிக்கைகள் உடன் நிறுத்தப்படல் வேண்டும் என்பதுடன், அந்த அலுவலகத்திற்கு கணக்காளர் ஒருவர் உடனடியாக நியமிக்கப்படல் வேண்டும்.

– இப்படி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மே தினச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.



# தொழிற்சாலைகள்தான் தேவை ஆக்கிரமிப்பு விஹாரைகளல்ல!

## மே தின உரையில் சந்திரகுமார் தெரிவிப்பு



"யுத்தம் முடிந்து 15 ஆண்டுகள் கடந்த பின்னும் இனப்பிரச்சினைக்கான தீர்வைக் காண்பதற்கு எந்த முயற்சிகளும் உருப்படியாக முன்னெடுக்கப்படவில்லை. பதிலாக இனமுரண்பாட்டை வளர்க்கும் விதமாக நில ஆக்கிரமிப்பு, பௌத்த விரிவாக்கத்துக்காக விஹாரைகளைக் கட்டுதல் என்றே அரசாங்கம் செயற்படுகிறது."

– இவ்வாறு சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மு. சந்திரகுமார் தனது மே தின உரையில் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி பசுமை பூங்காவில் இடம்பெற்ற சமத்துவக் கட்சியின் மே தின நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"இடர் நிறைந்த வரலாற்றுத் தருணத்திலேயே இந்த மே நாளும் வந்திருக்கிறது. இன ஒடுக்குமுறையும் பொருளாதாரப் பிரச்சினையும் இணைந்து இரட்டைத் தாக்குதலை நம்மீது மோசமாக நடத்துகின்றன. இரண்டையும் முறியடித்து விடுதலையடைய வேண்டிய வரலாற்றுக் கட்டாயத்தில் நாம் உள்ளோம்.

இனப்பிரச்சினைக்கும் பொருளாதாரப் பிரச்சினைக்கும் தீர்வைக் காண வேண்டிய அரசும் ஆட்சியாளர்களும் அதை வைத்தே பிழைத்துக் கொண்டிருக்கும் போக்கே தொடருகிறது. அரசாங்கத்தையும் ஆட்சியாளர்களையும் எதிர்ப்பதாகக் காட்டிக் கொள்வோரும் மறைமுகமாக இனவாதத்துக்கும் பொருளாதார நெருக்கடிக்கும் ஒத்துழைக்கிறார்கள். ஆகவே இரண்டு தரப்புகளும் மக்களுக்கு விரோதமாகவே செயற்படுகின்றன. இவற்றை நாம் முறியடிக்க வேண்டும். அதற்காக விழிப்படைய வேண்டும். ஒன்றிணைந்து பலமடைய வேண்டும்.

நாட்டின் பொருளாதார நெருக்கடியினால் தினமும் ஆயிரக் கணக்கில் ஆற்றலுடையோர் நாட்டை விட்டு வெளியேறிக் கொண்டிருக்கின்றனர். இதனால் உழைப்புச் சக்தியும் அறிவாற்றலும் நிறைந்த மனித வளம் நாட்டை விட்டுச் செல்கிறது. அந்த வளத்தை அப்படியே பிற நாடுகள் பெற்றுக் கொள்கின்றன. இந்த நிலை தொடர்ந்தால், மேலும் நமது நாடு பின்னடையும். உடலிலிருந்து குருதி வடிந்தோடித் தீர்ந்து விட்டால் உயிராபத்தைச் சந்திக்க வேண்டியிருப்பதைப்போலவே இந்த மனித வள இழப்பு நாட்டின் வளர்ச்சிக்கும் எதிர்காலத்துக்கும் ஆபத்தை விளைக்கக் கூடியது. ஆனால், இனவாதிகள் இதைப்பற்றியெல்லாம் சிந்திக்கத் தயாரில்லை.

இன்று நாட்டின் வளங்களையெல்லாம் அந்நிய சக்திகள் கொள்ளையடிக்க முற்படுகின்றன. ஒவ்வொரு பிரதேசத்திலும் வளக் கொள்ளைக்கு அரசாங்கமே துணைநிற்கிறது. அரசாங்கத்தோடு இணைந்து நிற்கும் சக்திகள் மக்களுக்கு விரோதமான முறையில் வளக்கொள்ளைக்குத் துணை போகின்றன. அனைத்து நெருக்கடிகளுக்கும் மத்தியில் வாழ்கின்ற மக்களே இதற்கும் எதிராகப் போராட வேண்டியுள்ளது.

உழைப்பாளர்களுடைய உரிமைக் குரலுக்கான இந்த நாளில் உழைப்பவர்களோடு இணைந்து அனைத்து ஒடுக்குமுறைகளுக்கும் எதிராக எங்களை எழுச்சி கொள்ள வைப்போம். அனைத்து ஒடுக்குமுறையையும் எதிர்த்துப் போராடி, உரிமை பெற்று சமத்துவமாக வாழ்வதே நமது இலட்சியமாகும்.

மே நாள் என்பது இவை அனைத்தையும் எதிர்த்து உடைப்பதற்கான ஒருங்கிணைந்த நமது எழுச்சியையும் பலத்தையும் எதிர்ப்புணர்வையும் பகிரங்கமாக வெளிப்படுத்துவதாகும். இந்த ஒருங்கிணைந்த எழுச்சியோடு நாம் நமது பலத்தைப் பெருக்க வேண்டும். ஒடுக்குமுறைக்கு எதிரான எதிர்ப்புணர்வை வளர்க்க வேண்டும்.

அதற்கான உறுதியை எடுத்துக் கொள்வோம். அதில் உறுதியுடன் நின்று வெற்றியடைவோம். அனைத்து அடக்குமுறைகளையும் எதிர்த்து முறியடிப்போம். நம்முடைய அறிவினாலும் ஆற்றலினாலும் வென்று புதிய சமத்துவ, சரித்திரம் படைப்போம்." – என்றார்.



# புதிய ஜனநாயக மார்க்சிச லெனினிசக் கட்சியின் மே தின ஊர்வலமும் கூட்டமும் நேற்று யாழ் நகரில்












புதிய ஜனநாயக மார்க்சிச லெனினிசக் கட்சியின் மே தின ஊர்வலம் நேற்று மாலை யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்பட்டது.

ஆரியகுளம் சந்தியிலிருந்து யாழ்ப்பாணம் றிம்மர் மண்டபம் வரை பேரணியாக சென்று றிம்மர் மண்டபத்தில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

“உழைக்கும் மக்கள் ஒன்றிணைவோம் நாட்டின் வளங்களைப் பாதுகாப்போம்!“ எனும் தொனிப் பொருளுடன் புரட்சிகர மேதினம் முன்னெடுக்கப்பட்டது

புதிய ஜனநாயக மார்க்சிச லெனினிசக் கட்சியின் வட பிராந்திய செயலாளர் செல்வம் கதிர்காமநாதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், அரசியல் குழு உறுப்பினர்களான க.தணிகாசலம், சட்டத்தரணி சோ.தவராஜா, எம்.இராசநாயகம், ச.நித்திகா, உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இதன்போது புரட்சிகர பாடல்கள், இசைநிகழ்வுகள், உரையாடல்கள் என்பன இடம்பெற்றன








# வவுனியா நகரில் உணர்வெழுச்சியுடன் நேற்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மேதினம்

(கே.வசந்தன்)

தமிழ் தேசிய மக்கள் முன்னனியின் பிரதான மேதின ஊர்வலமும் பொதுக்கூட்டமும் வவுனியாவில் நேற்று உணர்வு எழுச்சியுடன் இடம்பெற்றன.

முன்னதாக வவுனியா பண்டாரவன்னியன் சதுக்கம் முன்பாக ஆரம்பமான மேதின ஊர்வலம் அங்கிருந்து குருமன்காடு, கலைமகள் விளையாட்டு மைதானம் வரை சென்றடைந்ததுடன், அங்கு மேதின கூட்டம் இடம்பெற்றது.

முன்னணியின் வவுனியா மாவட்ட அமைப்பாளர் எஸ்.தவபாலன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினரும், கட்சியின் பொதுச் செயலாளருமானசெல்வராசா கஜேந்திரன், முன்னணியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ், கட்சியின் ஊடக பேச்சாளர் சட்டத்தரணி க.சுகாஸ் மற்றும் கட்சி தொண்டர்கள், ஆதரவாளர்கள் பெருமளவான பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

பேரணியில் கலந்துகொண்டவர்கள் “எங்கள் நிலம் எமக்கு வேண்டும்“, “இனப்படுகொலைக்கு சர்வதேச நீதி வேண்டும்”, “வெடுக்குநாறி எங்கள் சொத்து”, “அரசியல் கைதிகளை விடுதலை செய்!” போன்ற கோசங்களையும் எழுப்பியிருந்தனர்.










# இந்தியத் தூதுவர் ஜா நேற்று ஒலுவில் துறைமுகம் விஜயம்





(எம்.ஏ.றமீஸ்)

ஒலுவில் துறைமுகம் அமைந்துள்ள பிரதேசத்தைப் பார்வையிடுவதற்கும்,அதன் அபிவிருத்தி தொடர்பில் மேலதிகாரிகளுடன் கலந்துரையாடுவதற்கும் நேற்று இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா ஒலுவில் பிரதேசத்திற்கு உத்தியோக விஜயமொன்றை மேற்கொண்டார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீமின் வேண்டுகோளின் பேரிலே, அவரது ஒலுவில் விஜயம் அமைந்தது.

ஒலுவில் துறைமுகத்தையும் அதை சூழவுள்ள பிரதேசங்களையும் அபிவிருத்தி செய்வது தொடர்பிலும், அப்பிரதேசத்தில் ஏற்படும் கடலரிப்புப் போன்றவை தொடர்பான கலந்துரையாடல் இதன் போது இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இதன் போது நாடாளுமன்ற உறுப்பினர் பைஸக் காசிம், முன்னாள் மாகாண அமைச்சர்களான எம்.எஸ்.உதுமாலெவ்வை, எம்.ஐ.எம்.மன்சூர் மற்றும் அரச உயரதிகாரிகள், மீனவர்கள் துறை சார் முக்கியஸ்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# அரச கால்நடை வைத்திய அதிகாரிகள் இன்றும் நாளையும் பணிப்புறக்கணிப்பு



அரச கால்நடை வைத்திய அதிகாரிகள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடத் தீர்மானித்துள்ளனர்.

நாடு முழுவதும் இன்று மற்றும் நாளை ஆகிய இரு தினங்கள் இந்தப் பணிப்புறக்கணிப்பு முன்னெடுக்கப்படவுள்ளது.

சம்பள முரண்பாட்டுப் பிரச்சினை தீர்க்கப்படாதமை காரணமாக அரச கால்நடை வைத்திய வைத்தியர்கள் இந்த பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுகின்றனர்.

இதனால், கால்நடை வைத்தியசாலைகளும் இயங்கமாட்டா என அறிவிக்கப்பட்டுள்ளது.






# பொது வேட்பாளருக்காக ஒன்றிணைய தமிழ் மக்களுக்குச் செல்வம் அழைப்பு!

(எஸ்.நிதர்ஷன்)

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்தும் விடயத்தில் தமிழ்த் தேசியப் பரப்பில் இருக்கின்ற தமிழரசுக் கட்சி உள்ளிட்ட ஏனைய கட்சிகள் மற்றும் தரப்புகளை எம்மோடு இணைந்து கொள்ள வேண்டுமென அறைகூவல் விடுக்கின்றோம்.

– ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் தலைவர்களில் ஒருவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் இவ்வாறு தெரிவித்தார்.

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் மே தினக் கூட்டம் மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் நேற்று நடைபெற்ற போதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஈழத் தமிழினத்தின் உரிமைக்காக எமது மக்களும் போராளிகளும் எவ்வளவோ தியாகங்களை செய்திருக்கின்றனர். ஆனாலும் அந்த உரிமைகளுக்காக இத்தனை ஆண்டுகளாக தொடர்ந்தும் போராடுகிற இனமாக நாங்கள் இருக்கிறோம்.

இந்த நாட்டில் காலங்காலமாக ஆட்சிக்கு வந்த தென்னிலங்கை ஆட்சியாளர்கள் எமக்கான உரிமையை தராத அதேநேரத்தில் எமது அடையாளங்களையும் இருப்பையும் அழிக்கின்ற செயற்பாடுகளையே முன்னெடுத்து வந்தனர். இதனையே இப்போது ஆட்சியில் இருக்கின்ற ஆட்சியாளர்களும் செய்து வருகின்றனர்.

இவ்வாறான நிலைமைகளே இங்கு தொடருகின்ற போது இன்றைக்கு தென்னிலங்கை அரசியல்வாதிகள் தமிழ் மக்களைப் பார்த்து நீலிக்கண்ணீர் வடிக்கின்றனர். ஏனெனில் நாட்டில் மீண்டுமொருமுறை ஜனாதிபதித் தேர்தல் வரவிருக்கின்றதால் தமிழ் மக்களுக்கு அதைக் கொடுப்போம், இதைக் கொடுப்போம், அது வேண்டும், இது வேண்டும் என்றவாறாக தமிழ் மக்களில் கரிசனை உள்ளவர்கள் போன்று பேச ஆரம்பித்திருக்கின்றனர்.

இவை அனைத்தும் தேர்தலுக்காக என்பது அனைவருக்கும் நன்றாகவே தெரியும். இவ்வாறு தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்றுக் கொள்வதற்காக நாடகம் போடுகின்ற தென்னிலங்கை அரசியல்வாதிகள் இதே தேர்தல் முடிவடைந்தால் தமிழ் மக்களுக்கு எதிரான நிலைப்பாட்டிற்கு வந்துவிடுவார்கள்.

ஆகையினால் எமது மக்களின் பிரச்சினைகள், தேவைகளை வெளிப்படுத்தி, எமக்கான தீர்வை அடையும் வகையில் நாம் ஒருமித்து செயற்பட வேண்டிய அவசியம் தற்போது ஏற்பட்டு இருக்கிறது.

இதற்கமையவே வருகிற ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் தரப்பாக நாம் ஓரணியாக நின்று ஒரு பொது வேட்பாளரை நிறுத்துகின்ற செயற்பாட்டை ஆரம்பித்திருக்கிறோம். அவ்வாறு பொது வேட்பாளரை நிறுத்துவதென்ற விடயத்தில் எமது கூட்டமைப்பு ஒருமித்த நிலைப்பாட்டிலேயே இருக்கிறது.

அதேபோன்று தமிழ்த் தேசியப் பரப்பில் இருக்கின்ற தமிழரசுக் கட்சி உள்ளிட்ட ஏனைய கட்சிகளும் இந்த விடயத்தில் எம்மோடு இணைந்து கொள்ள வேண்டுமென அறைகூவல் விடுக்கின்றோம்.

எமது மண்ணுக்காகவும் மக்களுக்காகவும் காலத்தின் தேவை கருதி முன்னெடுக்கப்படுகின்ற பொது வேட்பாளர் என்ற விடயத்தில் அரசியல் இலாபங்கள், பேதங்களை மறந்து விட்டுக் கொடுப்புக்களுடன் தமிழ்த் தேசிய கட்சிகள் செயற்பட வேண்டியது மிக மிக அவசியமானது.

அனைவரும் எதிர்பார்க்கின்ற ஒற்றுமைக்கு எதிராகத் தனித்து தான் செயற்படப் போகின்றோம் என்பவர்களை மக்கள் நிச்சயம் புறக்கணிப்பார்கள். எனவே மக்களுக்கானவர்கள் என்றால் மக்கள் எதிர்பார்க்கின்ற அல்லது மக்கள் விரும்புகிற அல்லது மக்களிற்கு தேவையானதை நிறைவேற்ற வேண்டும். அதனைவிடுத்து அதற்கு மாறாக செயற்பட்டால் மக்களால் தகுந்தபாடம் புகட்டப்படும் என்பதையும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

ஆகையினால் தமிழர் தரப்பாக, ஒற்றுமையாக, ஓரணியாக நின்று தமிழர் பலத்தை பறைசாற்ற அனைவரும் முன்வர வேண்டுமென மீண்டும் மீண்டும் கோருகிறோம். இதற்கமைய அனைவருக்கும் மீண்டும் அழைப்பு விடுக்கின்றோம்.

மேலும் தமிழர் தரப்பு அரசியல் கட்சிகளைப் பொறுத்த வரையில் கடந்த காலங்களில் இந்தியாவை சரியாக கையாளவில்லை. அந்த பெரிய தவறை இனியும் நாம் செய்யக் கூடாது. எனவே புலம்பெயர் தேசங்களில் உள்ளவர்களையும் தமிழகத்தையும் இணைத்துக் கொண்டே நாம் பயணிக்க வேண்டும். புலம்பெயர் தேசங்களில் உள்ள பெரும்பாலனவர்கள் எங்களோடு இணைந்த செயற்பட தயாரகவே இருகின்றனர்.

தமிழ் மக்கள் தமக்கான உரிமையை கோரி போராட்டங்களை நடாத்திய காலத்தில் நாம் என்ன செய்கிறோம் என்பதை தென்னிலங்கையும் உலக நாடுகளும் எம்மைப் பார்த்துக் கெண்டிருந்தனர். அதிலும் குறிப்பாக அந்தக் காலத்தில் தெற்கு பயந்து கொண்டிருந்தது. ஆனால் இன்று தட்டிகேட்க யாரும் இல்லை என எண்ணுகின்றனர்.

எனவே ஆயுத பலம் இல்லாத இன்றைய நிலையில்ல நாம் தமிழர் தரப்பாக தாயகத்திலும் புலம்பெயர் தேசங்களில் உள்ளவர்களையும் தமிழகத்தில் உள்ளவர்களையும் இணைத்துக் கொண்டு பயணிக்க வேண்டும். அவ்வாறான ஒற்றுமையின் மூலமாக பலமான ஒரு தரப்பாக நாங்கள் செயற்படலாம். ஆகவே அவ்வாறாக அனைவரையும் ஒற்றுமையாக ஓரணியாக இணைத்து செயற்படுகின்ற நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டியது அவசியம். – என மேலும் தெரிவித்தார்.




# இலங்கைக்குப் படகில் தப்பிவர முயன்ற வவுனியாத் தம்பதி உட்பட 8 பேர் கைது!

## தங்கச்சிமடம் பொலிஸ் நிலையத்தில் வைத்து தீவிர விசாரணை

(மன்னார் நிருபர்)

தனுஷ்கோடி கடல் வழியாக படகில் சட்டவிரோதமாக இலங்கைக்குத் தப்பி வர முயன்ற இலங்கைத் தம்பதி மற்றும் இலங்கைக்குத் தப்பிச் செல்ல உதவிய 6 பேர் என 8 பேரைக் கைது செய்த தங்கச்சிமடம் பொலிஸார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

இராமநாதபுரம் மாவட்டம், வேதாளை பகுதியைச் சேர்ந்த சைபுல்லா நவீத், இம்ரான், நைனா முகமது, ரகுமான் உள்ளிட்ட நான்கு பேர் நேற்று முன்தினம் இரவு தங்கச்சிமடம் பஸ் நிலையத்தில் நின்று பேசிக் கொண்டிருந்தனர். அவர்கள் நால்வர் மீதும் முன்னதாக இலங்கைக்கு ஆள்களை சட்டவிரோதமாக அனுப்பி வைத்த வழக்கு நிலுவையில் உள்ள நிலையில் சந்தேகமடைந்த இரவு ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த தங்கச்சிமடம் பொலிஸார் நால்வரையும் பிடித்து விசாரித்தனர்.

இதன்போது தெரியவந்தவை வருமாறு:-

வவுனியாவைச் சேர்ந்த தம்பதியினரான சாந்தி மற்றும் இராஜேஸ்வரன் ஆகிய இருவரும் கடந்த 2017 ஆம் ஆண்டு விமானம் மூலம் சென்னை வந்தனர். அவர்கள் சென்னையில் தங்கியிருந்த நிலையில் மீண்டும் இலங்கைக்குத் திரும்பிச் செல்ல முடியாததால் சென்னை புழல் பகுதியைச் சேர்ந்த வினோத்குமார் மற்றும் கணேசலிங்கம் ஆகியோரைத் தொடர்பு கொண்டு சட்டவிரோதமாக தனுஷ்கோடி கடல் வழியாக படகில் இலங்கைக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுள்ளனர்.

இதையடுத்து இராஜேஸ்வரனிடம் பணத்தைப் பெற்றுக்கொண்ட கணேசலிங்கம் மற்றும் வினோத்குமார் ஆகிய இருவரும் வேதாளை பகுதியைச் சேர்ந்த நவீத் இம்ரானைத் தொடர்பு கொண்டு இலங்கைக்கு இருவரையும் அனுப்பி வைக்க ஏற்பாடு செய்துள்ளனர்.

அதன்பின்னர் இராஜேஸ்வரன், சாந்தி, கணேசலிங்கம், வினோத் குமார் ஆகிய நால்வரும் கடந்த இரண்டு நாள்களுக்கு முன்பு சென்னையில் இருந்து புறப்பட்டு இராமேஸ்வரம் வந்து தங்கச்சிமடத்தில் தங்கியிருந்துள்ளனர்.

வவுனியாத் தம்பதியினர் நேற்றுப் புதன்கிழமை இரவு தங்கச்சிமடம் மாந்தோப்பு கடற்கரையில் இருந்து நாட்டுப் படகில் புறப்பட்டு தனுஷ்கோடி கடல் வழியாக வவுனியாவுக்குத் தப்பி வரத் திட்டமிட்டமை விசாரணையில் தெரிய வந்ததையடுத்து அவர்கள் இருவரும், அவர்கள் இலங்கைக்குத் தப்பி வர உதவிய 6 பேரும் என மொத்தம் 8 பேரை தங்கச்சிமடம் பொலிஸார் கைது செய்து தங்கச்சிமடம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்துள்ளனர்.

8 பேரிடமும் மத்திய, மாநில உளவுத்துறை, மரைன் பொலிஸார் மற்றும் சட்ட ஒழுங்கு பொலிஸார் அடுத்தடுத்துத் தனித்தனியாக விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

விசாரணைகளின் பின்னர் 8 பேரும் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்படவுள்ளனர் என்று தங்கச்சிமடம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.












# சிங்களவர் அல்லாத மக்களுக்குத் தீர்வு 13 ஆம் திருத்தம் செயற்படுத்தப்படும்!

## கொழும்பு மே தின கூட்டத்தில் சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு

"நாட்டில் எந்த ஒரு பயங்கரவாதத்தையும் ஆரம்பிக்க அனுமதிக்கப்பட மாட்டாது. இந்த நாட்டின் சிங்களவர் அல்லாத மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு நிலையான தீர்வு வழங்கப்படும். 13 ஆவது அரசமைப்புத் திருத்தம் அங்கு செயல்படுத்தப்படும்.

"நாம் ஏனைய அரசியல்வாதிகளைப் போன்று வாக்குறுதிகளை மீறவில்லை. இந்த நாட்டின் 76 வருடகால ஜனநாயக வரலாற்றில் எதிர்க்கட்சியினால் செய்யப்படாத சேவையை எதிர்க்கட்சியாக இருந்து கொண்டு மக்களுக்கு செய்துள்ளோம். நான் அளித்த வாக்குறுதிகளில் பாதிக்கு மேல் எதிர்க்கட்சியில் இருந்தே செய்து முடித்துள்ளேன்."

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

'ஐக்கியமான நாடு சுபிட்சமான எதிர்காலம்' எனும் தொனிப்பொருளில் கொழும்பு, சத்தம் வீதியில் நடந்த ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதான மே தின கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

" 76 வருட வரலாற்றைப் பற்றி பேசும் இந்நேரத்தில், ஐக்கிய மக்கள் சக்தியின் அரசியல் பயணம் குறித்து அனைவரும் பெருமை கொள்ள வேண்டும். 76 ஆண்டுகளில் இந்த நாட்டின் எந்த அரசியல் தலைவர்களும் எந்த பதவியும் அதிகாரமும் இல்லாமல் எந்த பணியையும் செய்யவில்லை. ஆனால் எந்த ஓர் அரசியல் கட்சியும் செய்யாத சேவையை, ஜனநாயக வரலாற்றில் ஐக்கிய மக்கள் சக்தி முன்னெடுத்துள்ளதாலயே ஐக்கிய மக்கள் சக்தி இலங்கையின் நம்பர் 1 கட்சி.

நாட்டை அழித்தவர்களுடன் எமக்கு எந்த ஒப்பந்தமும் இல்லை. அவ்வாறு ஒப்பந்தம் செய்ய வேண்டியிருந்தால், பிரதமர் பதவிகளையோ அல்லது ஜனாதிபதி பதவிகளையோ எனக்கு முன்னரே பெற்றுக் கொள்ள முடியும். நானும் எனது குழுவும் எப்பொழுதும் மக்களுக்காவே கொள்கை ரீதியாகத் தீர்மானங்களை எடுத்தோம்.

நாட்டில் கொலைக் கலாசாரத்துக்கும் வன்முறைக்கும் இடமில்லை. நாட்டில் நீதியும் நியாயமும் மட்டுமே இருக்க வேண்டும். போதைப்பொருள் கலாச்சாரம், தீவிரவாதம், இனவாதம் போன்றவற்றுக்கு இடமில்லை.

எந்த ஒரு பயங்கரவாதத்தையும் ஆரம்பிக்க அனுமதிக்கப்பட மாட்டாது. இந்த நாட்டின் சிங்களவர் அல்லாத மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு நிலையான தீர்வு வழங்கப்படும். 13 ஆவது அரசமைப்புத் திருத்தம் அங்கு செயல்படுத்தப்படும்.

எனவே, மக்களுக்கான சலுகைகள் இன்றி மக்களுக்காக நாட்டுக்காக சேவையாற்ற விரும்பும் அனைவருக்கும் ஐக்கிய மக்கள் சக்தியின் கதவுகள் திறந்துள்ளது. கொள்கையை அடிப்படையாக கொண்ட ஆட்சிக்காக எம்முடன் ஒன்றிணையுங்கள்.

நாட்டின் நலன்புரி நடவடிக்கைகளுக்கு விசேட நிதியம் ஸ்தாபிக்கப்படும். 76 வருட காலம் குறித்து பேசும் போது நாம் பெருமடைகிறோம். எந்தவொரு எதிர்க்கட்சியும் மேற்கொள்ளாத பணியை ஐக்கிய மக்கள் ஆற்றயுள்ளது."– என்றார்.






# தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் மே தின ஊர்வலம் நேற்றுத் திருமலையில்!

(ஹஸ்பர் ஏ.ஹலீம்)

சர்வதேச தொழிலாளர் தினத்தை முன்னிட்டு மே தின ஊர்வலமொன்று திருகோணமலையில் நேற்று இடம் பெற்றது.

இந்த ஊர்வலத்தை தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் திரு கோணமலை மாவட்டத்தில் உள்ள கட்சி முக்கியஸ்தர்கள் இணைந்து ஏற்பாடு செய்திருந்தனர். ‘உழைப்பே உயர்வு’ எனும் தொனிப்பொருளின் கீழ் இடம் பெற்ற இந்த ஊர்வலமானது உவர்மலை சந்தியில் இருந்து லிங்க நகர் வரை பேரணியாக இடம்பெற்றது. ‘உழைப்பாளர்கள் உயர வேண்டும்’, ‘ஐக்கியம் வேண்டும்’, ‘பொதுத் தேர்தல் வேண்டும்’ என கோசங்களை எழுப்பிய வாறு ஊர்வலமாகச் சென்றனர்.அதன் பின் மே தினம் தொடர்பான நிகழ்வும் இடம் பெற்றது.

இதில் பொது மக்கள் கட்சி ஆதரவா ளர்கள் என பலர் கலந்து கொண்டனர்.










# மே தினத்தை விமரிசையாகக் கொண்டாடிய தலைமன்னார் ஊர்மனைக் கிராமத்து மக்கள்

(மன்னார் நிருபர்)

தலைமன்னார் ஊர்மனை கிராம மக்கள், இம்முறை மே தினத்தை வெகு சிறப்பாகக் கொண்டாடியுள்ளனர்.

இந்தக் கிராம மக்கள் கடந்த காலங்களில் பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் பொருளாதார பின்னடைவு மற்றும் இந்திய மீனவர்களின் அத்து மீறலால் ஏற்பட்ட பாதிப்புகள் உள்ளடங்கலாக பல்வேறு பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டிருந்தனர்.

இந்தக் கிராம மக்கள் நேற்று மே தினத்தை ஒன்று திரண்டு ஒற்றுமையாக கொண்டாடி மகிழ்ந்தனர்.

தலைமன்னார் ஊர்மனை கிராமத்தின் புனித லோறன்சியார் ஆலய பங்குத் தந்தை சந்தியோகு மார்க்கஸ் அடிகளார் தலைமையில் புனித லோரன்சியார் மீனவ கூட்டுறவு சங்கம் மற்றும் லோரன்சியார் விளையாட்டு கழகம் கூட்டாக இணைந்து மே தின நிகழ்வுகளை ஏற்பாடு செய்திருந்தன.

தலைமன்னார் ஊர்மனை கிராமத்தில் மீன்பிடி துறையில் அமைந்துள்ள சுரூபத்தடியில் நேற்றுக் காலை காலை மே தின கொண்டாட்ட நிகழ்வு திருப்பலியுடன் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதையடுத்து கிராம மக்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.

பின்னர் கிராம மக்கள் யாவரும் ஒன்று திரண்டு மீன்பிடி துறைமுகத்தில் போட்டி நிகழ்வுகளில் ஈடுபட்டனர்.

நீச்சல் போட்டி, தெப்பம் வலிக்கும் போட்டி, பெரிய மற்றும் சிறிய படகுகளின் போட்டி, பெண்களுக்கான கயிறு இழுத்தல் போட்டி போன்றவை இடம் பெற்றன.

தலைமன்னார்ஊர்மனை கிராமத்தின் கடற்படையினர் மற்றும் பொலிஸ் தரப்பினர் உள்ளிட்ட பல்வேறு பிரதி நிதிகள் இந்நிகழ்வுகளில் கலந்து கொண்டனர்.

மன்னர் மாவட்டத்தில் பல்வேறு மீனவக் கிராமங்களில் மே தின கொண்டாட்ட நிகழ்வுகள் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.















# சிங்கள - பௌத்த மரபுரிமையின் ஆக்கிரமிப்பு தமிழர் தேசம் மீது!

## தமிழரசுத் தலைமையில் அணிதிரண்டு போராட கிளிநொச்சி மேதினப் பிரகடனத்தில் அழைப்பு

(ந.லோகதயாளன்)

தமிழரின் தாயகமாகிய வடக்கு, கிழக்கு பூர்வீக மண்ணில் சிங்கள பௌத்த மரபுரிமை தொன்ம ஆக்கிரமிப்புகள் ஊடாக ஒரு பண்பாட்டுப் போரினை எம்மீது சிங்கள தேசம் ஏவிவிட்டிருக்கின்றது என தமிழ் அரசுக் கட்சி சார்பில் நேற்று கிளிநொச்சியில் நடத்தப்பட்ட மேதினக் கூட்டப் பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டது.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் தமிழ்த் தேசிய மே நாள் நேற்று கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது. இதில் மேற்கொண்ட பிரகடனத்திலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது. அந்தப் பிரகடனத்தின் விவரம் வருமாறு:-

இரத்தம் தோய்ந்த செங்கொடிகளை உயர்த்தியவாறு, உழைத்து உயர்வு பெற்ற உழைப்பாளிகளின் தியாகங்களை நினைவுகூர்ந்து, மேன்மை கொள்ளும் நாளே மே நாள். இரத்தத்தினால் தோய்ந்த செங்கொடிகள், அவை வென்று தந்த போராட்டங்களின் சுதந்திரத்தின் மாண்பையும் அதன் கண்ணியத்தையும் மனிதகுல வரலாற்றில் இடையறாது பதிவுசெய்துள்ளன என்பதை பெருமையோடு நினைவு கொள்ளும் நாளே இந்த மே நாள் ஆகும்.

மானிட சமூகத்திற்கு போராடாமல் வாழ்வில்லை என்பதையும், மாண்பில்லை என்பதையும் மனிதகுலம் நோக்கி அறைகூவல் விடுத்த எழுச்சி நாள் மே நாள். அனைத்து ஒடுக்குமுறைகளிலிருந்தும் விடுபட்டு, விடுதலையாகி, சுதந்திரப்பண் இசைக்க வேண்டுமென்ற மானிட தாகத்தின் மகிமையை ஒடுக்குமுறையாளர்களுக்கு உரத்துச் சொல்லும் உன்னத நாள் இந்நாள்.

பூமிப்பந்தில் வாழுகின்ற உழைப்பாளர்களின் செம்மையும், செழுமையும், சீர்நிறைந்த வாழ்வியலும் வையகத்தில் முந்தியிருக்கச் செய்யும் வகையில் முழுமை தந்த நாளாக, வேதனைகள் மத்தியிலும் மகிழ்ந்து நிறைவுபெறும் நாளாக மே நாள் வரலாற்றில் வடிவமெடுத்து வருகின்றது என்பதை பெருமையுடன் நினைவு கொள்வோம். உலகத் தொழிற்சமூகங்களோடு இணைந்து ஈழத்தமிழர்களும் தங்களின் இன ஒடுக்குமுறைகளுக்கு எதிராக, எல்லாவகை அடிமைத்தனங்களிலிருந்தும் விடுபடப் போராடியவாறு உலகத் தொழிலாளர் நாள் நிகழ்வில் பங்கு கொள்வது நிறைவைத் தருகிறது.

இலங்கைத்தீவில் வாழுகின்ற தமிழ்த் தேசிய இனம் என்ற வகையில், ஈழத்தமிழர்களாகிய நாம் எமது இனத் தேசிய விடுதலைக்காகப் போராடிக் கொண்டே சமநேரத்தில் எமது தொழிலாளர்களின் விடுதலைக்காகவும் போராட வேண்டிய சவால்களைச் சந்தித்து நிற்கின்றோம். வடிவங்கள் வேறுபட்ட போதும் வேறுபடாத ஒடுக்குமுறைச் சித்தாந்தம் சிறீலங்கா அரசினால் தமிழர் தேசம் மீது கட்டவிழ்த்துவிடப்பட்டே வருகிறது.

ஆயுத வழிமுறைகள் அமைதியடைந்த போதிலும் கட்டமைக்கப்பட்டதும் கட்புலனாகாததுமான இன அழிப்புப் போர் தமிழர் தேசத்தில் ஆழமாக குவியச் செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக தமிழரின் தாயகமாகிய வடக்கு, கிழக்கு பூர்வீக மண்ணில் சிங்கள பௌத்த மரபுரிமை தொன்ம ஆக்கிரமிப்புகள் ஊடாக ஒரு பண்பாட்டுப் போரினை எம்மீது சிங்கள தேசம் ஏவிவிட்டிருக்கின்றது. இது தமிழ் மக்களின் அடிப்படை அரசியல் அபிலாசையாகிய தமிழ்த்தேசியத்தை அழித்துவிடுவதற்கான கட்டமைக்கப்பட்ட செயல்முறையாக நீட்சி பெற்று வருவது வேதனை தருகிறது.

உழைப்பினால் பெறப்படுகின்ற வெகுமானங்களை மாத்திரமன்றி வாழ்வியலின் அடிப்படை உரிமைகளையே இழந்து நிற்கின்ற துர்ப்பாக்கிய நிலை உருவாகியுள்ளது. தமது வாழ்வுரிமைக்காக, சுதந்திரத்துக்காக போராடுகின்ற எமது மக்கள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் துணைகொண்டு ஆட்சியாளர்களால் அடக்கி ஒடுக்கப்பட்டு வருகின்றனர். மதச்சார்பற்ற இலங்கை என்ற அரசியல் அமைப்பின் வாசகத்தை மறுத்து, பன்மைத்துவத்தைப் புறக்கணித்து, இலங்கைத்தீவை பௌத்த - சிங்கள நாடு என நிறுவுவதில் சிங்கள அரசுகள் மிக இறுக்கமாகவே செயற்பட்டு வருகின்றன.

தமிழர் மரபுரிமைகளைச் சிதைத்து,

தொடர்ச்சி▼



# சிங்கள - பௌத்த மரபுரிமையின் ஆக்கிரமிப்பு தமிழர் தேசம் மீது!

தொடர்ச்சி▲

தொன்மங்களைத் தோண்டியெடுத்து ஈழத்தமிழ் வரலாற்றை இல்லாதொழிப்பதில் அரச கட்டமைப்புகள் அதிகார பூர்வமாக செயற்பட்டு வருகின்றன. மிகப்பெரும் இனப் படுகொலையை சர்வதேசம் பார்த்திருக்க ஈழத்தமிழர்கள் மீது நிகழ்த்திய பின்பும், தமிழர்களின் அரசியல் அபிலாசைகளை ஆழ ஊடுருவி அகற்றிவிடுவதில் பௌத்த சிங்கள பீடம் அதிகூடிய கரிசனை செலுத்தி வருகிறது. உழைப்பாளிகளாகிய தங்களின் பிள்ளைகளும், கணவன்மாரும், உறவுகளும் ஆயிரக்கணக்கில் வலிந்து காணாமலாக்கப்பட்டமை தொடர்பில் அந்தப் பெற்றோரின் நெடுநாளைய போராட்டங்களுக்கு பெறுபேறுகள் எவையும் கிட்டவில்லை. சிறையில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளால் அவர்களது குடும்பங்கள் உழைப்பாளரை இழந்து பல்லாண்டு காலமாக தவித்து வருகின்றன.

நிலங்களைப் பறிப்பதும், நில வளங்களை அள்ளிச் செல்வதும், கடலினைப் பறிப்பதும், கடல் வளங்களைக் கொள்ளையடிப்பதும் என சிங்கள அரச காரியங்கள் சட்டத்திற்கு முரணாக நிகழ்ந்தேறி வருகின்றன. ஊழலும் மோசடியும் சகல நிர்வாகத் துறைகளிலும் நிறைந்து போயிருக்கின்றன. மனிதாபிமானப் பார்வைகள் இன்றி பக்கச்சார்புகளாலும் முதலாளித்துவ மேலாண்மைகளாலும் இலங்கைத்தீவு மலிந்து நிறைந்து போயுள்ளது.

குறிப்பாக, முப்படை பலமும், சர்வதேச நெருக்க நிலை உறவும், அணிசேரா கொள்கையும் கொண்டிருப்பதாக தம்பட்டம் அடிக்கும் சிங்கள அரசு, சர்வதேச போதைப்பொருள் வர்த்தகத்தின் களமாக இலங்கையைத் திறந்துவிட்டிருக்கிறது. வன்முறை மேலோங்கி பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் எதிரான வன்கொடுமைகள் அதிகரித்து சனத்தொகையில் சரிநிகராய் இருக்கும்



பெண்களின் பாதுகாப்பு கேள்விக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறது.

ஜனநாயகத்தின் நான்காவது தூணாக வர்ணிக்கப்படும் ஊடகத்துறை பொருளாதாரப் பலம் மிக்கவர்களாலும், அரசியல் வன்பலத்தாலும் சீரழிந்து போயுள்ளது. அஞ்சுவதும் அடிபணிவதும் அரசியல் துதி பாடுவதும் ஊடகப் பண்புகளாக புதிய வடிவம் பெற்றிருக்கின்றன. மொத்தத்தில் பொருளாதார கட்டமைப்புகள் சீர்குலைந்து, வாழ்வின் வசதிகள் வலுவிழந்து, வருமானம் குறைந்து, வறுமை மேலோங்கி, முடங்கிய வாழ்வில் எம் தேசம் சிக்கித் தவிக்கிறது. மானியங்களும், நிவாரணங்களும் உழைக்கும் மக்களின் உயர்வைக் கட்டுப்படுத்தும் அன்பளிப்புகளாக அரசால் வழங்கப்படுகின்றன. மொத்தத்தில் பொருளாதார சிறப்புமின்றி, அரசியல் சீர்திருத்தமுமின்றி, தமிழர் வாழ்வில் சுயாட்சியுமின்றி தமிழர்களின் தேசிய வாழ்வு சிங்கள தேசத்தால் காவு கொள்ளப்பட்டு வருகிறது.

இத்தகைய நிர்மூலமான சூழ்நிலையில் அயலக இந்தியாவும், அனைத்துலக நாடுகளும் தமது மனச்சாட்சிக் கதவுகளை இறுகமூடி அமைதி கொள்வது ஈழத்தமிழர்களை ஆழமான வேதனைக்கு இட்டுச்சென்றுள்ளது. தமிழ்த் தேசிய இனம் தமது வாழ்வுரிமையை வென்றெடுப்பதற்கு இத்தகைய ஒடுக்குமுறைச் சூழல்களின் மத்தியில் தொடர்ந்து போராடும் சக்தியை புதுப்பித்துக் கொள்வதே இன்று எம்முன் உள்ள ஒரே வழியாகும்.

எமது இனத்தின் விடுதலைக்காக தமது இன்னுயிர்களை ஈகம்செய்த கல்லறை மேனியர்களை நெஞ்சங்களில் நினைவு கூர்ந்து, அந்த சத்திய இலட்சியத்திற்காக தொடர்ந்து போராடுவதே தமிழர்களின் அரசியல், பொருளாதார மற்றும் பிராந்திய பாதுகாப்புக்கு ஒரே வழியாகும் என்று இன்றைய இந்த மே நாளில் நாம் பிரகடனம் செய் கின்றோம்.

தமிழர் இருப்பை அழித்து, பௌத்த சிங்கள மேலாதிக்கத்தைத் திணித்து பூர்வீக நிலத்தையும், பண்பாட்டு வாழ்வியலையும் அழிக்க நயவஞ்சகத்தோடு ஆட்சி புரியும் சிங்களப் பேரினவாத கருத்தியலுக்கு எதிராக இங்கு கூடியிருக்கும் ஆயிரக்கணக்கான இளைஞர்களும், பெண்களும், மக்களும் இணைந்து எமது தேசியத் தந்தை – தந்தை செல்வா அவர்கள் வகுத்த பாதையில் மரபுவழித் தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை என்கின்ற உன்னத இலட்சியங்களுக்காக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமையில் அணிதிரண்டு போராடி, எல்லா ஒடுக்குமுறைகளிலிருந்தும் விடுதலை பெற்று, எமது இனத்தின் உரிமையை அடைந்தே தீருவோம் என திடசங்கற்பம் பூணுகிறோம். – என்று உள்ளது.

# தமிழ்ப் பொது வேட்பாளர் ஏன்? கிளிநொச்சியில் விக்கி விளக்கம்

வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் ஏன் அவசியம் என்பது தொடர்பில் நேற்று கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய முன்றிலில் நடைபெற்ற தமிழ்த்தேசிய மே தின விழாவில் உரையாற்றும் போது யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் விளக்கினார். அப்போது அது தொடர்பாக அவர் கூறியவை வருமாறு:-

போராட்டம் இல்லாது நாம் எமது இன்றைய இழிநிலையை மாற்ற முடியாது. எமக்கென அல்லது எமது சந்ததிகளுக்கென மாற்றங்களை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என்றால் நாம் போராடவேண்டும்.


மேதினப் போராட்டங்கள், தொழிலாளர் போராட்டங்கள் ஆகியன வடக்கு கிழக்கு தமிழ்மக்களுக்கு ஒரு பெரும் உண்மையை உணர்த்தி நிற்கின்றன. அதாவது போராட்ட மனோநிலையை நாங்கள் கைவிட்டோமானால் இழந்த உரிமைகளை நாம் திரும்பவும் பெற முடியாது என்பதே அது. ஆயுதமேந்திப் போராடுவது மட்டும் போராட்டம் என்று நாம் நினைக்கக்கூடாது. போராடும் போது செயல்திறனும் செயல்நுட்பமும் எமக்கு அவசியம். அவ்வாறான ஒரு மனநிலையில்தான் இன்று ஒரு தமிழ்ப்பேசும் பொதுவேட்பாளரை ஜனாதிபதித் தேர்தலில் களம் இறக்கவேண்டும் என்று சொல்லிவருகின்றோம். அதெப்படி என்று நீங்கள் கேட்கக் கூடும்.

பொதுவேட்பாளர் தேர்தலில் நாம் தேர்தலில் வெல்லப் போட்டியிடவில்லை. பின் எதற்காக என்று கேட்டால் எமது நிலையை எமது மக்களுக்கும் மற்றையோருக்கும் தெளிவுபடுத்தவும் மக்கள் தீர்ப்பு ஒன்றை வட கிழக்கு மாகாணங்களில் பெற ஆவனசெய்யவுமேதான் இந்த ஏற்பாட்டை வலியுறுத்துகின்றோம்.

ஐ.நாவினால் வடகிழக்கு மாகாணங்கள் மக்கள் தீர்ப்பிற்கு விடப்பட்டால் மக்களின் மனதில் என்ன உள்ளது என்பதை அறிந்து கொள்ள முடியும். முன்னைய தொழிலாளர்கள் ஒன்று சேர்ந்து போராட்டங்களை முன்னெடுத்துச் சென்றவாறு தமிழர்களாகிய நாம் எமது வருங்கால சந்ததியினரை மனதில் வைத்து சில போராட்டங்களில் ஈடுபட வேண்டும். வன்முறை தேவையில்லை. பட்டினி கிடக்க அவசியமில்லை. ஆனால் பொது வேட்பாளரை முன் நிறுத்தி எமது தமிழ்ப் பேசும் உறவுகளை ஒன்றிணைத்து எமக்கென உலக அரங்கத்தில் சில நன்மைகளைப் பெற முயற்சிப்பதே இந்தப் போராட்டம்.

அவ்வாறான ஒரு போராட்ட வழிமுறையாகவே தமிழ் பொதுவேட்பாளரை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் முன்னிறுத்தும் செயல் அமைகின்றது.

தக்க பொதுவேட்பாளர் ஒருவரை நாம் முன்னிறுத்தினால் அவர் மும்



மொழிகளிலும் எமது வரலாறு பற்றி, எமக்கிழைக்கப்பட்ட அநியாயங்கள் பற்றி, இன்னல்கள், பாகுபாடுகள் பற்றி உலகுக்கு எடுத்துரைத்து எமது வடக்கு கிழக்கு மக்களின் எதிர்பார்ப்புக்களை ஐக்கிய நாடுகள் நடத்தக்கூடிய தகுந்த மக்கள் வாக்கெடுப்பின் மூலம் வெளிக் கொண்டுவர முடியும் என்ற கருத்தை நிலைநாட்டமுடியும்.

பலர் பொதுவேட்பாளரை முன்னிறுத்தினால் தமக்கு வேண்டிய சிங்கள வேட்பாளருக்கு வாக்களிக்க முடியாது போய்விடும் என்று அஞ்சுகின்றார்கள். அது தவறு. பொதுவேட்பாளருக்கு நாம் எமது முதல் வாக்கை அளித்துவிட்டு 2 ஆம், 3 ஆம் விருப்பு வாக்குகளை நாம் விரும்பும் சிங்கள வேட்பாளருக்கு அளிக்க முடியும். இதன் மூலம் தமிழ் மக்களின் ஒற்றுமை பேணப்படும். எமது எதிர்பார்ப்புக்கள் உலகறியச் செய்யப்படும். அதே நேரத்தில் எமது தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்கும் இடமளிக்கப்படும். இவ்வாறு செய்வதால் இனக்கலவரங்கள் வெடிக்கவேண்டிய அவசியம் எதுவும் ஏற்படாது. எதுஎவ்வாறெனினும் இன்றைய ஆபத்தான பொருளாதார சூழலில் கலவரங்கள் ஏதேனும் வெடித்தால் நாட்டின் நிலை அதலபாதாளத்திற்குத்தள்ளப்பட்டுவிடும் என்பதை எமது அரச தலைவர்கள் அறிந்து வைத்துள்ளார்கள். ஆகவே கலவரங்கள் ஏற்பட விடமாட்டார்கள்.

பெரும்பான்மையினரின் அதிகாரபலத்தினுள் சிக்குப்பட்டு தத்தளிக்கும் வடகிழக்குத் தமிழ்பேசும் மக்கள், எமது தொழிலாள முன்னோடிகள் முன்னர் போராடியதை போல் புதுப் புது போராடும் உத்திகளை கடைப்பிடித்து எமது தமிழ்பேசும் மக்களின் உரிமைகளை திரும்பப்பெற முயற்சிசெய்ய வேண்டும்.

ஒற்றையாட்சியானது இந்த நாட்டை சிங்கள மக்களுக்காக, சிங்கள மக்களால் பெரும்பான்மைச் சிங்கள மக்களின் நலன் பேணி நடத்தப்படும் ஓர் ஆட்சியாகும்.

எவர் ஆட்சிக்கு வந்தாலும் நடக்கப் போவது சிங்கள இனவழி ஆட்சியே. இந்த இனவழி ஆட்சியை ஆங்கிலத்தில் Ethnocracy என்பார்கள். இந்தச் சொல்லை முதன் முதலில் சுமார் 25 வருடங்களுக்கு முன்னர் பாவித்தவர் இஸ்ரேலிய பேராசிரியர் ஒரென் யிவ்டசெல் என்பவராவார். இன்றும் உயிருடன் இருக்கின்றார். அண்மையில் எமது நில அபகரிப்பு பற்றிய இணைய வழி கருத்தரங்கத்தில் பங்கேற்றிருந்தார்.

அவர் செய்த ஆராய்ச்சிகளின் பின்னர் ஒரு முக்கியமான கருத்தை வெளியிட்டார். இலங்கையும் இஸ்ரேலும் இனவழி ஆட்சிகளே என்றார். இந் நாடுகள் இரண்டும் Ethnocracies என்றார். இந் நாட்டில் ஜனநாயகம் தழைக்கவில்லை, இன நாயகமே தலைவிரித்தாடுகின்றது என்றார்.

வட கிழக்கு மாகாணங்களைப் பொறுத்த வரையில் எமக்கு வேண்டாத பாதுகாப்பை எமக்களிப்பது சிங்கள இராணுவமே. எமது காணிகளை சூறையாடுவது சிங்கள சகோதரர் வழிநடத்தும் அரச திணைக்களங்களே. எமது தாய் மண்ணில் பௌத்த சின்னங்களை அமைப்பதும் சிங்கள பௌத்த பிக்குகளே. சிங்களவர்களால் சிங்களவர்க்கென்று சிங்களவர் மத்தியிலிருந்து நடாத்தப்படும் ஒரு இனவழி ஆட்சியே எமது ஒற்றையாட்சி. தமக்கு ஒற்றையாட்சி வேண்டும் என்று டி.எஸ்.சேனநாயக்க, ஒலிவர் குணதிலக போன்றவர்கள் சதி செய்து பெற்ற அரசாங்க முறையே இந்த ஒற்றையாட்சி அரசாங்க முறை. இதன் மூலம் இரண்டு மாகாணங்களில் 3000 வருடங்களுக்கு மேலாகப் பெரும்பான்மையினராக இருந்து வந்த தமிழ் பேசும் மக்கள் சிங்களம் பேசும் 7 மாகாணங்களுடன் சேர்க்கப்பட்டு 9 மாகாணங்களில் நாம் சிறுபான்மையர் ஆக்கப்பட்டோம். நாங்கள் எங்கள் மண்ணில் பெரும் பான்மையினராக இருந்தும் சிறுபான்மையினராகவே நடத்தப்பட்டு வருகின்றோம். சட்டப்படி சுயநிர்ணய உரிமை எமக்குண்டு. ஆனால் அதைப் பற்றி மௌனம் காத்து வருகின்றன தொடர்ந்து வரும் அரசாங்கங்கள்.

ஆனால் அந்த உரிமையை வட கிழக்கு மாகாண மக்கள் ஒரு வாக்கெடுப்பில் பாவிக்க இடம் தாருங்கள் என்று நாம் அதனைக் கேட்டால் எம்மைப் பயங்கரவாதிகள் என்று அழைப்பார்கள். ஆனால் ஜனாதிபதி வேட்பாளர் அதைக் கோரலாம்.

நான் முதலமைச்சராகப் பதவி ஏற்றதும் விஸ்வமடுவில் ஒரு கூட்டத்திற்குப் போயிருந்தேன். சுமார் 25 அல்லது 30 படையினர் கூட்ட மண்டபத்திற்கு வெளியில் நின்றனர். நான் போனதும் அத்தனை பேரும் எனக்கு சல்யூட் அடித்தனர். உள்ளே சென்று ஏன் இத்தனை படைவீரர்கள் என்று கேட்டேன். எமக்கு பாதுகாப்பு அளிக்க வந்துள்ளார்கள் என்று கூட்ட ஒழுங்கமைப்பாளர் கூறினார். நீங்கள் கூப்பிட்டு வந்தார்களா அல்லது தாமாக வந்தார்களா என்று கேட்டேன். நாங்கள் கூப்பிடவில்லை என்றார் அவர். மேடையில் அவர்களின் இராணுவப் பொறுப்பதிகாரி கால் மேல் கால் போட்டு அமர்ந்திருப்பதையும் காட்டினார்.

தொடர்ச்சி▼

# தமிழ்ப் பொது வேட்பாளர்....

**தொடர்ச்சி▲**

நான் பேசும் போது இப்போது தேர்தல் முடிந்துவிட்டது. இனி இராணுவம் வடக்கு மாகாணத்தில் தொடர்ந்து இருக்கத் தேவையில்லை. அவர்கள் வாபஸ் பெற்றுப் போகலாம் என்ற கருத்தை முன்வைத்தேன். வைத்து விட்டுத் திரும்பி படையதிகாரியிடம் 'என்ன அப்படித்தானே?' என்று ஆங்கிலத்தில் கேட்டேன். அவர் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது. நான் இறங்கிச் செல்லும் போது எனக்கு வரும்போது சல்யூட் அடித்த அத்தனை படைவீரர்களும் வேறு திசை நோக்கி ஆடாமல் அசையாமல் நின்றார்கள். பாவம்! எனக்கு அவர்களின் பிரியாவிடை சல்யூட் கிடைக்காமல் போய்விட்டது! இன்று வரையில் இராணுவத்தினர் பிரியாமலே இங்கு இருக்கின்றார்கள். இக் கால கட்டத்தினுள் எமது காணிகளை கையேற்றுள்ளனர். சுற்றுலாவில் ஈடுபட்டுள்ளனர். உணவகங்களை நடத்தி வருகின்றனர். புத்தமத வழிபாட்டு தலங்களை உருவாக்க உதவி வருகின்றனர். வணிகத்தில் ஈடுபட்டுள்ளனர். தமிழ் மக்கள் காணிகளைத் திணைக்களங்கள் கையேற்க உதவி புரிந்து வருகின்றனர்.

எமக்கு சுயநிர்ணய அதிகாரம் இருக்கின்றது என்று யார் சொன்னார்கள்? இன்று இனவழியாட்சியே இங்கு நடந்து வருகின்றது. அதை மாற்ற வேண்டும்.

அவ்வாறு மாற்றுவதாயின் நாம் ஒற்றுமைப்பட வேண்டும். எமது குரல் ஐ.நா வரையில் கேட்க வேண்டும். கேட்டதன் பின்னர் வடகிழக்கில் மக்கள் தீர்மானத்திற்காக சர்வதேச நாடுகளால் இங்கு தேர்தல் நடத்தப்பட வேண்டும். அதை உலகுக்கு எடுத்துக் கூற ஒரு தமிழ் பொது வேட்பாளர் ஜனாதிபதித் தேர்தலில் பங்குபற்ற வேண்டும். அவருக்கு எம் தமிழ் மக்கள் வாக்களித்து எமது கோரிக்கையை உலகறியச் செய்ய வேண்டும். இதுவே தமிழ் பொது வேட்பாளரை ஜனாதிபதித் தேர்தலில் பங்கு பற்ற வலியுறுத்துவோரின் உத்தியாகும். எமக்குள் பிரிவினை இல்லாது தமிழ் பொது வேட்பாளரை நிறுத்தும் பணியில் ஈடுபடுவோமாக!

உயிர்வலியின் மொழி - 2024

# கந்தகபூமி

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்**

**பாடசாலை மாணவர்களிடையே நடாத்தும்**

## கட்டுரைப் போட்டி - 2024

தமிழர்களின் உரிமைக்கான பயணத்தில் இழைக்கப்பட்ட கொடுமைகளையும் அநீதிகளையும் அவற்றுக்கான நீதி கோரலையும் நம் வளரிளம் தலைமுறைக்கு கடத்துவோம்! அவை நம் இளையோரின் கட்டுரைகளாக வெளிப்படட்டும். நாங்கள் சிந்திய குருதியும் கொடுத்த உயிர்க் கொடைகளும் எம் மண்ணுக்கும் மக்களுக்குமான உரமாகட்டும்.

**போட்டி விதிமுறைகள் :**

- நாட்டின் எப்பாகத்திலிருந்தும் எப்பாடசாலை மாணவர்களும் பங்குபற்ற முடியும்.
- கட்டுரைகளை நேரிலோ, மின்னஞ்சலிலோ அல்லது தபால் மூலமாகவோ கிடைக்க செய்ய முடியும்.
- வெற்றியாளர்களின் விபரங்கள் மின்னஞ்சல், தொலைபேசி குறுஞ்செய்தி, பத்திரிகை, சமூக வலைத்தளங்கள் ஊடாக அறியத்தரப்படும்.
- பரிசில் தொடர்பான விபரங்கள் பின்னர் அறியத்தரப்படும்.
- கட்டுரைகள் வழங்கப்பட்ட சொற்களின் எண்ணிக்கைக்கு மேற்படலாம் ஆனால் குறைதல் கூடாது.
- மாணவர்கள் பின்வரும் விபரங்களை தங்கள் ஆக்கங்களுடன் இணைத்து அனுப்ப வேண்டும்.
  1. மாணவர் முழுப்பெயர்
  2. பாடசாலையின் பெயர்
  3. பயிலும் தரம்
  4. மாவட்டம்
  5. தொடர்பு எண் (தொடர்புகளிற்காக)

**அனுப்புவதற்கான இறுதித் திகதி :**
**31.05.2024 (வெள்ளிக்கிழமை)**

**போட்டித் தலைப்புக்கள் :**

**பிரிவு 1 : தரம் 9 - 11 (300 - 350 சொற்கள்)**

- நந்திக்கடல் காட்டும் வழி
- பழந்தமிழர் பண்பாடும் வாழ்வியலும்
- பாடசாலைகளையும் சமூகத்தையும் இணைத்தல்.
- சமூகத்திற்குத் தேவையான கல்வி : வாய்ப்புக்களும் சவால்களும்
- தமிழர் தொன்மமும் வரலாறும்
- வடக்கு - கிழக்கு கல்விப் பாரம்பரியம்
- ஈழத்தமிழர் வரலாறு காட்டும் வழியும் படிப்பினைகளும்

**பிரிவு 2 : க.பொ.த உயர்தரம் (400 - 450 சொற்கள்)**

- தொடர்கதையாகும் ஆக்கிரமிப்புக்கள்
- தமிழர் போராட்ட வாழ்வு கற்றுத்தந்த வாழ்வியல் ஒழுக்கம்
- தமிழ்ச் சமூகத்தை நேசித்தலும் மாணவருக்குரிய வாய்ப்புக்களும்
- உலகச் சமூகங்களில் தேசிய உரிமைப் போராட்டங்கள்
- தேசக்கட்டுமானத்திற்கான சிந்தனைகளைப் பாடசாலைகளிலிருந்து ஆரம்பித்தல்
- தாயகம் மீதான திட்டமிட்ட சமூக சீர்கேடுகள் : வன்முறை மற்றும் போதையிலிருந்து இளைய சமூகத்தை விடுவித்தல்
- வடக்கு – கிழக்கின் தற்சார்புப் பொருளாதாரம்
- தமிழருக்கு ஏமாற்ற வரலாறு சொல்லும் பாடம்

**கிடைக்கச் செய்ய வேண்டிய முகவரி :**
கந்தகபூமி போட்டிகள், பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
**மின்னஞ்சல் :** uoj.usumedia@gmail.com




# தோட்டத் தொழிலாளர்களை சிறு தேயிலை உற்பத்தியாளர்களாக மாற்றிக் காட்டுவேன்!

## தலவாக்கலையில் சஜித் பிரேமதாஸ வாக்குறுதி

ஐக்கிய மக்கள் சக்தியில் அங்கம் வகிக்கும் தொழிலாளர் தேசிய சங்கத்தின் மே தின கூட்டம் தலவாக்கலை நகர சபை மைதானத்தில் நேற்று நடைபெற்றது.

இந்த மே தினக் கூட்டம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் நடைபெற்றது.

தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவர் பழனி திகாம்பரம், பிரதி தலைவர் எம். உதயகுமார், முன்னாள் அமைச்சர் அர்ஜுன ரணதுங்க உள்ளிட்ட பலர் இந்த கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, மலையக சமூகத்தின் மொழி உரிமையை பாதுகாத்து, நிலம் மற்றும் வீட்டு உரிமையை வழங்குவதாக உறுதியளித்தார்.

தோட்டத்தொழிலாளர்களை சிறு தேயிலை உற்பத்தியாளர்களாக மாற்றுவதாகவும் அவர்கள் கௌரவமாக நாட்டில் வாழும் உரிமையை வழங்குவேன் என்றும் சஜித் பிரேமதாஸ வாக்குறுதி வழங்கினார்.














# இம்மாத இறுதிக்குள் எமது மக்களுக்கு காணி உரிமை நிச்சயமாகக் கிடைக்கும்

## கொட்டகலை மே தினக் கூட்டத்தில் ஜீவன் தொண்டமான் தெரிவிப்பு

“எமது மக்கள் பல பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். நாம் நில உரிமையற்ற சமூகமாக இருக்கிறோம். இந்த மாத இறுதிக்குள் எமது மக்களுக்கு காணி உரிமை நிச்சயம் கிடைக்கும்.”

– இவ்வாறு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் செயலாளரும் அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

கொட்டகலை பொது மைதானத்தில் நேற்று இடம்பெற்ற இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் மே தினக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே ஜீவன் தொண்டமான் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

“ஆறுமுகன் தொண்டமான் மறைந்த பின்னர் எம்மால் மேதினக் கூட்டம் நடத்த முடியவில்லை.

கொரோனா, பொருளாதார நெருக்கடி என்பவற்றை எதிர்கொள்ள நேரிட்டது. இ.தொ.கா. முழந்து விட்டதா எனக் கேள்வி எழுப்பினார்கள். 4 வருடத்தின் பின்னர் பாரிய மேதினக் கூட்டமொன்றை நடத்துகின்றோம்.

தோட்டத் தொழிலாளர்களுக்கு 1,700 ரூபா சம்பள அதிகரிப்பை பெற்றுக் கொடுப்பதாக உறுதியளித்தோம்.

அந்த வாக்குறுதியை நிறைவேற்றியிருக்கிறோம். கடந்த 4 வருடங்களாக பல்வேறு அவமானங்களையும், பிரச்சினைகளையும் சந்தித்திருக்கிறோம்.

எமது மக்கள் பல பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். நாம் நில உரிமையற்ற சமூகமாக இருக்கிறோம். இந்த மாத இறுதிக்குள் எமது மக்களுக்கு காணி உரிமை நிச்சயம் கிடைக்கும்.”– என்றார்.

கொட்டகலை பொது மைதானத்தில் நேற்று இடம்பெற்ற இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் மே தினக் கூட்டத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் கலந்துகொண்டார்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் அழைப்பின் பேரில் ஜனாதிபதி இந்த நிகழ்வில் இணைந்து கொண்டார். மைதானத்திற்கு வருகை தந்த ஜனாதிபதியை இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் செயலாளர் நாயகம் அமைச்சர் ஜீவன் தொண்டமான் மற்றும் தலைவர் செந்தில் தொண்டமான் ஆகியோர் வரவேற்றனர்.

பெருந்திரளான மக்களின் பங்குபற்றுதலுடன் மே தினக் கூட்டமும் பேரணியும் நடைபெற்றன. மலையக மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் மிகப்பெரிய தொழிற்சங்கம் மற்றும் அரசியல் கட்சியாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் காணப்படுகிறது.

மே தினக் கூட்டத்தில் கலந்து கொண்ட ஜனாதிபதிக்கு மலையக மக்களினால் அமோக வரவேற்பு அளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில், மாலைதீவு முன்னாள் ஜனாதிபதி மொஹமட் நசீட், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தவிசாளர் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ரமேஷ்வரன்,தேசிய அமைப்பாளர் ஏ.பி சக்திவேல், பிரதித் தலைவர் கணபதி கனகராஜ், பிரதித் தலைவி அனுஷியா சிவராஜா, பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் தலைவர் பாரத் அருள்சாமி உள்ளிட்ட கட்சி முக்கியஸ்தர்கள்,ஆதரவாளர்கள் உள்ளிட்ட பெருந்திரளானோர் கலந்து கொண்டனர்.









# இன்றைய ராசி பலன்கள் - 02.05.2024




இன்று நன்மை தீமை இரண்டும் கலந்து காணப்படும்.உரையாடலின் போது கவனமாக இருங்கள்.பயணங்கள்செய்ய வாய்ப்புள்ளது.

பணியிடத்தில் சிறப்பான பலன்களைக் காணலாம்.உங்களின் சிறிய முயற்சிகள் பெரும் வெற்றியை அளிக்கும்.

உங்கள் துணையுடன் சில பயனுள்ள விஷயங்களைப் பேசுவீர்கள். என்றாலும் பேச்சு ஆக்கபூர்வமாக இருக்கும் வகையிலும் உறவின் நல்லிணக்கத்தை பராமரிக்கும் வகையிலும் இருக்குமாறு பார்த்துக் கொள்ளுங்கள்.

இன்று கணிசமான தொகை உங்களிடம் காணப்படும். உங்கள் குடும்பத்தோடு பயணம் செல்ல நேரலாம்.




இன்று உங்கள்ஆற்றலையும் வலிமையையும் உணரும் நாள்.இன்று உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

கடினமான பணிகளைக் கூட இன்று நீங்கள் எளிதாகச் செய்வீர்கள். நீங்கள் பணிகளை திறம்பட கையாண்டு உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டை பெறுவீர்கள்.

இன்று இருவரும் மனம் பொருந்தி ஒற்றுமையுடன் கானாப்படுவீர்கள். உங்கள் காதலின் எதிர்காலத்தை பற்றி கலந்தாலோசிபீர்கள்.

இன்று பண வரவு காணப்படுகின்றது. நீங்கள் எதிர்பாராத வகையிலிருந்து பணம் கிடைக்கும்.

ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும். தியானம் அல்லது யோகா மேற்கொள்வது உங்களுக்கு நல்லது.




இன்று சிக்கல் நிறைந்த நாளாக காணப்படும். வளர்ச்சி குறைந்து காணப்படும். இதனால் இன்று ஏமாற்றங்களும் நிறைந்து காணப்படும்.

உங்கள் சக பணியாளர்களிடம் அகந்தைப் போக்கை காண்பிப்பீர்கள். உங்கள் வளர்ச்சி குறித்து அவர்கள் சிறிது பொறாமைப்படுவார்கள்.

உங்கள் துணையுடன் சமூகமான உறவு காணப்படாது. நல்லுறவை பராமரிக்க சகஜமான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

இன்று பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. பணத்தை கவனமாகக் கையாள வேண்டும். சேமிப்பு குறைந்து காணப்படும். இன்று நிதி குறித்த எந்த முடிவையும் எடுக்க வேண்டாம்.உயரமுத்தம் மற்றும் பதற்றம் காரணமாக தலைவலி ஏற்பட வாய்ப்புள்ளது.




நீங்கள் எந்த செயலை செய்தாலும் அதனை பொறுப்புடன் செய்வீர்கள். இதனால் வளர்ச்சியும் வெற்றியும் எளிதாகப் பெறுவீர்கள். இன்று முக்கிய முடிவுகளை எடுக்கலாம்.

உங்கள் பணிகளை சாமர்த்தியமாக செய்வீர்கள்.தொழில் சார்ந்த அணுகுமுறை மேற்கொள்வீர்கள். பணிகளை எளிதாக முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் சகஜமான அணுகுமுறை மேற்கொண்டு நல்லுறவை ஏற்படுத்துவீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்றைய நாளை அதிக முயற்சி எடுக்க பயன்படுத்திக் கொள்ளுங்கள். இன்று ஊக்கத்தொகை கிடைக்க வாய்ப்புள்ளது.

இன்று அதிக ஆற்றலுடன் காணப்படுவீர்கள். இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




உங்கள் இலக்குகளை அடைவதற்கு சிறந்த நாள். எளிதாக உங்கள் இலக்குகளை அடைவீர்கள். அடிக்கடி பயணம் ஏற்படலாம். அது உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கலாம்.

உங்கள் பணியில் திறமைகளை வெளிப்படுத்துவீர்கள். இது உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும். உங்கள் பணிகளை உற்சாகமாக செய்வீர்கள்.

உங்கள் இருவரிடம் காணப்படும் பரஸ்பர புரிந்துணர்வு காரணமாக உங்கள் துணையிடம் உங்கள் கருத்துக்களை மனம் திறந்து கூறுவீர்கள். நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்கும். உங்களின் கடின உழைப்பிற்கு கூடுதல் பணம் ஊக்கத்தொகையாக கிடைக்கும்.




இன்று அதிக சிந்தனையுடன் காணப்படுவீர்கள். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்வதன் மூலம் வெற்றி காணலாம். அமைதியாக இருக்க வேண்டும். தியானம் மேற்கொள்ள வேண்டும்.

பணி நிமித்தமான பயணங்கள் காணப்படும். அதிக பணிகள் காரணமாக சவாலான சூழ்நிலைகளை சந்திக்க நேரும். நீங்கள் சற்று சோர்வடைவீர்கள்.

உங்களிடம் காணப்படும் அகந்தை காரணமாக உங்கள் துணையுடன் தகவல் பரிமாற்ற பிரச்சினை காணப்படும். உங்கள் துணையுடன் நல்லுறவை பராமரிக்க இதனை தவிர்த்தல் வேண்டும்.

இன்று நிதிநிலைமை பலன் தரும் வகையில் சாதகமாக இருக்காது. தொலை தூர நிலுவைப் பணம் கிடைப்பதற்கு தாமதங்கள் ஏற்படும்.செரிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் இன்று காணப்படும்.




அதிர்ஷ்டக் குறைவு காரணமாக கடைசி நிமிடத்தில் சிறந்த வாய்ப்புகளை இழப்பீர்கள். இது உங்களுக்கு கவலையை அளிக்கும். முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணிகளைக் கையாளும் போது ஸ்திரத்தன்மை இழந்து காணப்படுவீர்கள். சக பணியாளர்கள் ஆதரவு கிட்டாது. மேலதிகாரிகளின் அங்கீகாரம் கிடைக்காது.

நீங்கள் உணர்ச்சி வசப்பட்ட நிலையில் இருப்பீர்கள். இது உங்கள் துணையுடனான உறவில் வெளிப்படும். உங்கள் துணையிடம் நட்பான அணுகுமுறை தேவை.

இன்று அதிக செலவுகள் காணப்படும். உங்கள் பொறுப்புகள் இன்று அதிகமாக காணப்படும். உங்களிடம் உள்ள குறைந்த பணத்தைக் கொண்டு பொறுப்புகளை நிறைவேற்ற இயலாது.




உங்கள் பொறுமை சோதனைக்குள்ளாகும் நாள். இன்று திட்டமிட்டு செயலாற்ற வேண்டியது அவசியம். பிரார்த்தனை மற்றும் பக்திப் பாடல்கள் கேட்பது உங்களுக்கு ஆறுதல் தரும்.

நீங்கள் குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க இயலாது. பணிகள் நிலுவையில் இருக்கும். அது உங்களுக்கு கவலையை அளிக்கும். சக பணியாளர்களிடமிருந்து வரும் வதந்திகளை நம்ப வேண்டாம்.

உங்கள் துணையுடன் நல்ல தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள், நீங்கள் இருவரும் வெளியிடங்களுக்கு செல்வதற்கான வாய்ப்பு உள்ளது. இதன் மூலம் உறவு மேம்படும்.

இன்று பணம் சம்பாதிக்க சாதகமான வாய்ப்புகள் கிடைக்கும். உங்கள் சேமிப்பு திறன் அதிகரிக்கும்.

உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துங்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 02.05.2024




இன்று குறைந்த செயலாற்றலுடன் காணப்படுவீர்கள். ஆன்மீக ஈடுபாடு மற்றும் பிரார்த்தனை மேற்கொள்வது நல்லது. தியானமும் மேற்கொள்ளலாம். பிறருடன் உரையாடும் போது கவனமாக உரையாடுங்கள்.

பணியில் உங்கள் பொறுப்புகளை சிறிது பதட்டத்துடன் கையாள்வீர்கள். இதற்கு எதிர்காலம் பற்றிய உங்கள் தேவையற்ற பயமே காரணம். அமைதியாக உற்சாகத் துடன் பணியாற்றுங்கள்.

கருத்து வேறுபாடு காரணமாக உங்கள் துணையுடன் ஈகோ பிரச்சினை ஏற்படும். அதனை தவிர்க்க வேண்டும். நட்பான அணுகுமுறை வேண்டும்.இன்று பண வரவு குறைந்து காணப்படும். சம்பாத்தியத்தை குடும்பத்தில் ஏற்படும் பொறுப்புகளுக்காக செலவு செய்ய நேரும்.




இன்று உங்கள் வளர்ச்சியில் சில தடைகள் காணப்படும். சிறப்பாக திட்டமிடுதல் மற்றும் யுக்திகளை கையாள்வதன் மூலம் வெற்றி பெறலாம். அமைதியாக இருந்து பதட்டத்தை தவிர்ப்பதன் மூலம் நன்மை கிடைக்கும்.

பணிகளை முன்கூட்டியே திட்டமிடுவதன் மூலம் தவறுகள் நேராமல் தடுக்கலாம். இதனால் உங்கள் பணியின் தரம் உயரும்.

உங்கள் துணையின் விருப்பபடி நடந்து கொள்வதன் மூலம் மகிழ்ச்சியை தக்க வைத்துக் கொள்ளலாம். வேறு விதமாக செயல்பட்டால் குழப்பமும் பதட்டமும் ஏற்படும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. என்றாலும் பூர்வீகச் சொத்து மற்றும் எதிர்பாராத வகையில் பணம் கிடைக்கும்.




இன்று நீங்கள் அதிகப் பணியில் மூழ்கி இருப்பீர்கள். புதிதாக ஒன்றை அடைவதில் உறுதியாக இருப்பீர்கள். கடினமாக உழைப்பதன் மூலம் வெற்றி காண்பீர்கள்.

பணியிடச் சூழல் சிறந்த செயல்திறன் ஆற்ற சாதகமாக இருக்கும். உங்கள் வேலைத் தரம் உங்களின் திறமையை பறைசாற்றும். நீங்கள் பணி சம்பந்தாமான சந்திப்பில் கலந்து கொள்வீர்கள். உங்கள் கருத்துக்களை தெளிவாக கூறுவீர்கள்.

உங்கள் துணையுடன் அன்பான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். எதிர்கால முடிவுகளைப் பற்றி கலந்தாலோசித்து பரஸ்பரம் ஒரு முடிவுக்கு வருவீர்கள்.

உங்கள் கடின உழைப்பின் மூலம் ஊக்கத்தொகை மற்றும் சலுகைகள் வகையில் பண வரவு காணப்படும். அது உங்களுக்கு உற்சாகத்தை அளிக்கும்.




இன்று உங்கள் செயல்களில் கவ னமாக இருக்க வேண்டியது அவசியம். எதிர்மறை எண்ணங்களை வளர்த்துக் கொள்ளாதீர்கள். நம்பிக்கையுடனும் மகிழ்ச்சியுடனும் இருங்கள்.

பணியிடத்தில் அமைதியான சூழ்நிலை காணப்படாது. சக பணியாளர்கள் மற்றும் உங்கள் மேலதிகாரிகள் உங்களை புறக்கணிப்பது போலவும் தவிர்ப்பது போலவும் உணர்வீர்கள். உங்கள் பணிக்கு அங்கீகாரம் கிடைக்காது.

உங்கள் துணையிடத்தில் பொறுமையின்மையும் கவனமற்ற வார்த்தைகளும் இருவருக்குமிடையே மகிழ்ச்சியற்ற தன்மையை ஏற்படுத்தும். இத்தகைய நடத்தையை தவிர்ப்பதன் மூலம் மகிழ்ச்சியை அனுப விக்கலாம்.








# தேர்தலுக்குப் பின்னர் நாடு எதை நோக்கி செல்லும் என்பதைச் சிந்திக்க வேண்டும்!

## முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

இடம்பெறவுள்ள ஜனாதிபதி தேர்தல் தீர்மானமிக்கது என்றும், தேர்தலுக்கு பின்னர் நாடு எதை நோக்கிச் செல்லும் என்பதை மக்கள் சிந்திக்க வேண்டும் என்றும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பு கம்பல் பார்க்கில் இடம்பெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மேதின கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அத்துடன், ஜனாதிபதி தேர்தலில் எமது வேட்பாளரே வெற்றிபெறுவார் எனவும், ஆகவே நாட்டு மக்கள் அனைவரும் எம்முடன் கைகோர்க்க வேண்டும் என்றும் நாட்டு மக்களுக்கு மஹிந்த ராஜபக்ஷ அழைப்பு விடுத்தார்.





